# தினக்குரல்
තිනක්කුරල්
யாழ்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 269 புதன்கிழமை 08 டிசம்பர் Wednesday 08th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## வட மேல் மாகாண ஆளுநர் காலமானார்

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83 ஆவது வயதில் காலமானார்.

வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83 ஆவது வயதில் காலமானார். வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்று உள்ளமை பக்கம் 02

## இன்றும் ஒரு மணி நேர மின்வெட்டு

க.பிரசன்னா

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவுறும் வரையில் இன்றும் ஒரு மணித்தியால மின்வெட்டினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. பக்கம் 02

# தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்க உதவுகின்றனவா?

## -உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் குறித்து கஜேந்திரன் சபையில் கேள்வி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழி ப்பதற்கான வேலைத் திட்டங்களுக்காகவா உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புக்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றனவென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சுற்றாடல் அமைச்சு, வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல், உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக்கம், வளவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,ஆகியவற்றின் மீதான கருத்தை முன் வைக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் பக்கம் 02






## வட கிழக்கில் மட்டும் இப்படி ஒரு அராஜகம்

-சித்தார்த்தன் எம்.பி. கடும் விசனம்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



இடிந்த தமிழ் பாடசாலைக் கட்டடங்கள் உள்ள இடங்கள் கூட காட்டுப்பிரதேசங்கள் என்று ஒதுக்கப்படுவதுடன் 6 அடிக்கு மேற்பட்ட மரங்கள் ஒரு இடத்தில் இருக்குமென்றால் அந்த இடம் காடாக ஒதுக்கப்பட்ட இடமாகவும். அதேபோல் கூகுள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் பக்கம் 02

## ஜனவரியில் புதிய பிரதமராக ரணில்!

-எந்தவித உண்மையும் இல்லை என்கிறது அரசு-

ந.ஜெயகாந்தன்

ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் மேற்கொள்ளவோ, ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதவியை வழங்குவதற்காகவோ எந்தக் கலந்துரையாடலும் நடக்கவில்லை என்றும், இது தொடர்பான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண பக்கம் 02

-ஐ.ம.ச.உறுப்பினர்கள் இன்று முதல்-

## சபை அமர்வுகளில் பங்கேற்க தீர்மானம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இன்று புதன்கிழமை முதல் சபை அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி கடந்த தினங்களில் அவர்கள் சபை அமர்வுகளை புறக்கணித்திருந்தனர். பக்கம் 02

## இராணுவத்திடமிருந்து விடுபடுமா பலாலி விமான நிலைய பிரதான வீதி?

-நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி பணிப்புரை






யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் பகுதி இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயத்தக்குள் முடக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபை,நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில், பாராளுமன்றக் கட்டடத் தொகுதியின் முதலாம் இலக்க அறையில் கூடியது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போதைய பாதுகாப்புப் பிரிவினரின் அவதானத்துக்கு இலக்காகியுள்ள விடயங்கள் தொடர்பில், அமைச்சர் சமல் பக்கம் 02

## பசில் இந்தியா சென்றது ஏன்?

-சபைக்கு தெளிவுபடுத்தக் கோருகிறார் ரணில்-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்நாட்டில் நிதி அமைச்சர்களாக இருந்த எவரும் வரவு-செலவு திட்ட விவாத காலத்தில் ஒருபோதும் வெளிநாடுகளுக்கு செல்லவில்லை. பக்கம் 02

-2 ஆவது நாளாகவும் எதிர்க்கட்சி புறக்கணிப்பு-

## விவாதம் இன்றியே விடயங்கள் நிறைவேற்றம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் அமைச்சுக்கள். இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதம் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் இடம்பெறாத நிலையில் திருத்தங்கள், தெளிவுபடுத்தல்களுடன் அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அரசினால் நிறைவேற்றப்பட்டன. பக்கம் 02

## யாழில் கரையொதுங்கும் சடலங்கள் பின்னணியில் உள்ள மர்மம் என்ன?

-காணாமல் போனவர்களின் உறவுகள் மத்தியில் கவலை-




யாழ். மாவட்ட கடற்கரைகளில் ஒரு வாரத்தில் அடுத்தடுத்து 6 சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் இவ்விடயம் தொடர்பான மர்மம் நீடிக்கிறது. இந்நிலையில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மத்தியில் இது அச்சத்தை தோற்றுவித்துள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரமேசந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கரை பக்கம் 02

-இழுவை வலை படகுகளிடமிருந்து-

## நான் ஒரு இரவுக்கு 5000 ரூபா பெறுகிறேனா?



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வடக்கில் தொழிலில் ஈடுபடும் 500 இழுவை வலை படகுகளிடமிருந்தும் நான் ஒரு இரவுக்கு ஒரு படகிடமிருந்து 5000 ரூபா கப்பமாக பெறுவதாக, சுமந்திரன் எம்.பி. தனது சிறப்புரிமையை பயன்படுத்தி இந்த சபையில் பக்கம் 02

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்க தலைவரிடம் ரி.ஐ.டி விசாரணை

-சுமார் இரண்டரை மணி நேரம் வாக்குமூலம் பதிவு-



தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் சுமார் இரண்டரை மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த கால சிவில் சமூக செயற்பாடுகள், நடத்தப்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகவும் குறிப்பாக மாவீரர் தின நிகழ்வுகள் சம்பந்தமாகவும் பல்வேறு பக்கம் 02






## கிளிநொச்சியில் யுவதியை கடத்தி காதலர் காட்டிய சாகசத்தில் விபரீதம்

-தறிகொட்டு ஓடிய டிப்பர் விபத்தில் சிக்கி ஒருவர் பலி-

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவில் 24 வயதான யுவதி கடத்திச்செல்லப்பட்ட டிப்பர் வாகனம் வாய்க்காலில் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

கடத்தப்பட்ட யுவதியும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பகு பக்கம் 02

## வடக்கில் 3 தீவுகளிலும் இந்தியாவுக்கு இடமில்லை

ந.ஜெயகாந்தன்

வடக்கில் மூன்று தீவுகள் தொடர்பான வேலைத்திட்டத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை பக்கம் 02

## இராணுவத்திடமிருந்து ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையா டப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பலாலி விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் பகுதி இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் முடக்கப்பட்டுள்ள விட யத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதன்போதே இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கு மாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

## கிளிநொச்சியில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியை சேர்ந்த ஒருவர், கிளிநொச்சி - புளியம்பொக்கனையைச் சேர்ந்த 24 வயதான யுவதியுடன் கடந்த 4 மாதங்களாக காதல் தொடர்பு கொண் டிருந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. 7 நண்பர்களுடன் நேற்று முன்தினம் இரவு டிப்பர் வாகனத்தில் புளியம்பொக்கனை பகுதியில் உள்ள யுவதியின் வீட்டுக்கு சென்ற குறித்த நபர் அவரை கடத்தியுள்ளார்.

இதன்போது, யுவதியின் உறவினர் கள் டிப்பரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த போது வேகக்கட்டுப் பாட்டை இழந்து டிப்பர் வாய்க்காலுக் குள் வீழ்ந்துள்ளது. டிப்பர் வாகனத் தையும் சந்தேகநபரே செலுத்தியுள்ள தாக பொலிஸார் கூறினர். சந்தேகந பருக்கு துணையாக வந்திருந்த 17 வயது இளைஞர் விபத்தில் உயிரி ழந்தார். கடத்தப்பட்ட யுவதி காலில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சை களுக்காக யாழ். போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தை அடுத்து சந்தேகநபர் உள்ளிட்ட 6 பேர் தப்பிச்சென்றுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். தப்பிச்சென்ற சந்தேகநபர் உள்ளிட்ட 6 பேரையும் கைது செய்வதற்கான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச-55)

## இன்றும் ஒரு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணிமுதல் இரவு 9.30 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணிநேர மின்வெட்டினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிச க்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மின்வெட்டு மேற்கொள்ளப்படும் பகுதிகள் தொடர்பில் எவ்வித தீர் மானமும் எடுக்கப்படவில்லை எனவும், தேவைப்படும் போது மின் வெட்டு மேற்கொள்ளப்படும். நுரைச் சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றில் இரண்டு பங்கு மின் உற்பத் திகள் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் மூன்றாவது ஜெனரேட்டரை மீண்டும் இயக்குவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் தேவைப்படும்.

தடையில்லா மின்சாரம் வழங்கு வது எமது கடமையாகும். ஆனால் இக்காலப்பகுதியில் நுகர்வோர் மின் சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். ஒரு வீட்டில் ஒரு விளக்கை அணைக்க முயற்சி த்தால் 7 மில்லியன் விளக்குகளை அணைக்க முடியும். இப்பழக்கத்தை நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டுமென அவர் மேலும் தெரி வித்தார்.

நுரைச்சோலை அனல்மின் நிலை யம் மீளமைக்கப்படும் வரை நாட் டின் பல பகுதிகளுக்கான மின்ச ார விநியோகத்தை குறைந்தது ஒரு மணித்தியாலத்திற்கு இடைநிறுத்த லாம் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அண்மையில் அறிவித்தி ருந்தது. நாடளாவிய ரீதியில் கடந்த 3 ஆம் திகதி மின்சாரம் தடைபட்டதை தொடர்ந்து நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளும் தடைபட்டிருந்தது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலை யத்தின் மூலம் வழங்கப்படும் 900 மெகாவாட் முழு கொள்ளளவையும் தேசிய மின்கட்டமைப்புடன் இணைப் பதற்கு மூன்று நாட்கள் ஆகுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## வட கிழக்கில் மட்டும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காட்டு பிரதேசமாகவும் ஒதுக் கப்படும் அவலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டும் முன்னெடுக் கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி.யான தா.சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் ,உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக் கம், வளவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, ஆகியவற்றின் மீதான கருத்தை முன் வைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாது காப்பு என்ற இரு திணைக்களங்களும் உண்மையில் வனப்பாதுகாப்புக்கா அல்லது வன ஜீவராசிகள் பாதுகாப் புக்கா இருக்கின்றன என்ற கேள்வி எமது மக்கள் மத்தியில் பரவலாக இருக்கின்றது. ஏனென்றால் இந்த இரு திணைக்களங்களினாலும் அங்கு நடைபெறுகின்ற விடயங்களை பார்க் கின்ற போது அந்தக்கேள்வி நியாய மாகவே இருக்கும். 2001-2005 லேயே வந்த வர்த்தமானியின் அடிப் படையிலே சில விடயங்கள் நடைபெ றுகின்றன.

6 அடிக்கு மேற்பட்ட மரங்கள் ஒரு இடத்தில் இருக்குமென்றால் அந்த இடம் காடாக ஒதுக்கப்பட்ட இடமாக பார்க்கப்படுகின்றது. அதேபோல் இந்த கூகுள் வரைபடத்தில் பார்த்து கொஞ்சம் பச்சை வட்டமாக இருந் தால் அதுவும் ஒரு காட்டு பிரதேசமாக ஒதுக்கப்படுகின்றது .இவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு,கிழக்கில் மட்டுமே நடக்கின்றன. வடகிழக்கில் யாழ்ப்பாணத்தில் குறைவாக இருந் தாலும் வன்னியில் பல இடங்களில் நடக்கின்றன என்றார்.

## பசில் இந்தியா ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பசில் ராஜபக்ச வரவு-செலவு திட்ட காலத்திற்குள் இந்தியாவிற்கு சென்று வந்துவிட்டார். யாரிடமும் மண்டியிட்டு பணம் பெற்றுக்கொள்ள மாட்டோம் என அரசு கூறும் அதே வேளையில் இந்தியாவிற்கு சென்ற நிதி அமைச்சர் அங்கு என்ன செய்தார். புத்தகயாவை வழிபட சென்றாரா? நிதி அமைச்சரின் இந்திய விஜயம் எதற்காக என்பது தொடர்பில் சபைக்கு தெளிவு படுத்த வேண்டுமென முன்னாள் பிரதம ரும் ஐ.தே .க. தலைவரும் எம்.பி.யுமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சபாநா யகர் தலைமையில் கூடிய பின்னர் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப் பிய போதே இவ்வாறு தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எம்.பி.யுமான ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில்,

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு குறித்த தகவலை எமக்கு பெற்றுத்தரு மாறு அண்மையில் சபையில் கோரி னோம்.ஒரு சில தினங்களில் தரவுகளை தருவதாக வாக்குறுதியளித்த போதும் இன்றுவரை எமக்கு தரவில்லை. ஆனால் இந்தியாவிற்கு கொடுத்துள்ளீர்கள். இந் தியாவிற்கு கூற முடியும் என்றால் ஏன் இந்த சபைக்கு கூற முடியாது? மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இணைய கலந்துரையாடல் ஒன்றில் இவ்விடயங் களை முன்வைத்துள்ளார். ஆகவே உண் மையான நிலைமையை நீங்கள் இந்த சபைக்கு கூற வேண்டும் என்றார். இதன் போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசி ங்க, முன்னாள் பிரதமர் வலியுறுத்திய விட யத்துக்கு உரிய திகதியில் பதில் வழங்குவ தாக நான் கூறவில்லை. அதேபோல் இது குறித்து கேள்வியும் எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் அதற்கான பதில் தயாராகி வருகின்றது. மேலும் வரவு-செலவு திட்ட இறுதி விவாதத்தில் நிதி அமைச்சரினால் இது குறித்த முழுமையான விளக்கம் முன்வைக்கப்படும் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த ரணில் விக்கிரமசிங்க, நாம் இது குறித்த கேள்வி எழுப்பிய வேளையில் சபைக்கு முன்வைப்பதாக வேளைக்கும் தெரிவித் தீர்கள். அதுமட்டுமல்ல இந்த காரணி குறித்து மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, சகலதும் தரப்படுத் தப்பட்டு சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 4ஆம் சரத்துக்கு அமைவாக ஆலோசனை குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே சர்வ தேச நாணய நிதியத்திற்கு கூற முடி யும் என்றால், இந்திய அரசாங்கத்திற்கு கொடுக்க முடியும் என்றால், முன்னாள் ஆளுநருக்கு தெரிகின்றது என்றால் ஏன் சபைக்கு வழங்க முடியாது? நிதி நிர்வா கம் சபைக்கே உள்ளது, நாம் காரணம் கேட்டும் அதனை சபைக்கு முன்வைக் கவில்லை என்றால் அது சிறப்புரிமை மீறல் செயற்பாடாகும். நிதி அமைச்சி ன் விவாதத்திற்கு முன்னர் இதனை ச பைப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண் டும், வரலாற்றில் முதல் தடவையாக நிதி அமைச்சர் இல்லாது வரவு-செலவு திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சந்திரிகா குமாரதுங்க நிதி அமைச்சராக இருந்த காலத்திலும், மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்த காலத்திலும் ச பைக்கு வருகைதந்தார்கள். ஆனால் இப்போது அவ்வாறு அல்ல. ஆகவே இதனை கருத் தில் கொள்ள வேண்டும் என்றார்.

## தமிழ் தேசத்தின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறுகையில்,

வவுனியா வடக்கின் பிரதேச செய லாளர் பிரிவிலுள்ள வெடிவைத்தகுளம் பகுதியில் 1984 ஆம் ஆண்டு காலப்ப குதி யில் இராணுவம் ,ஊர்காவல்படை களின் அச்சுறுத்தல் காரணமாக அங்கி ருந்து மக்கள் வெளியேறி இருந்தார்கள் .அந்த மக்கள் மீளவும் அங்கு மீளக்கு டியமர அனுமதிக்கப்படாத நிலையில் அந்தப்பகுதியில் பெரியகட்டிக்குளம் ஒதுக்க காடு என அறிவிக்கப்பட்டிருந் ததுடன் அதன் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த பின்னரும் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்படாத நிலையில் அப்பகுதியில் கச்சல்சமளங்குளம் என்று சொல்லப்ப டுகின்ற கிராமத்தின் பெயர் சப்புமல் தென்ன மாற்றம் செய்யப்பட்டு அங்கு பெரியதொரு ''சப்புமல்கஸ்கட'' என்ற விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இந்த பெரியக் கட்டிக்குளத்தையும் அதற்கு பக்கத் திலிருந்த இன்னொரு சிறிய குளத் தையும் இணைத்து காடழிக்கப்பட்டு ஒரு பாரிய குளம் அமைக்கப்பட்டு தமிழர்கள் விவசாயம் செய்து வந்த 300 ஏக்கர் வயல் நிலங்கள் உருவாக் கப்பட்டு சிங்களமக்கள் குடியேற்றப் பட்டுள்ளார்கள். வடக்கு,,கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் நிலங்களை பறிமுதல் செய்து பெரும் பான்மையினத்தவர்களின் தேவைக ளுக்காக கொடுத்து ஒரு இனக்கரைப்பு செய்வதன் மூலம் எமது இனத்தை இல்லாமல் செய்யும் ஒரு வேலைத் திட்டமே இங்கு நடைபெறுகின்றது. இந்த விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். தமது பகுதிக ளில் தமிழர்கள் முழுமையாக மீளக்குடி யமர நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

அடுத்ததாக முல்லைத்தீவு மாவட் டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23803ஏக்கர் ஏனைய காடுகள் என்ற பகுதிக்குள் வரும் காடுகளை ஒதுக்க காடுகளாக புதிதாக அறிவிப்பதற் கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி,ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உங்களுக்கு உதவி செய்யும் அமைப் புக்களிடம் நான் கேட் க விரும்புவது என்னவென்றால் நீங்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவது தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழி ப்பதற்கான வேலைத்திட்டங்களுக்காக வா? எனக் கேள்வி எழுப்பினார்.

## நான் ஒரு இரவுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தார். அவர் முடியுமானால் இந்தக்கருத்தை பொதுவெளியில் ஊடகங்களுக்கு சொல்ல முடியு மாவென கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சவால் விடுத் தார். சுமந்திரனின் கருத்துக்கு அந்த கிராமத்து மக்கள் சுமந்திரனுக்கு தகுந்த பாடத்தை படிப்பித்திருந் தார்கள். அந்தக்கிராமத்தில் ஹர்த் தால் நடத்தி சுமந்திரனின் உருவ பொம்மையையும் எரித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பாராளுமன்றத்தில் எதனையும் வாந்தி எடுக்கலாமென சிலர் நினைக் கின்றனர். பொதுவெளியில் நாளை அவர் இந்த கருத்தை ஊடகங் களுக்கு சொல்வாராக என நான் வெளிப்படையாக அவரிடம் கேட்கின் றேன். அப்படி சொல்வாரா இருந்தால் நான் நீதிமன்றத்தின் மூலம் அது தொடர்பான உண்மையை நிரூபிக்க முடியும் என்றார்.

## வடமேல் மாகாண ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 3 ஆம் திகதி உறுதிப்படுத்தப் பட்டது.

இதனை அடுத்து அவர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன், சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை காலமானார். வட மேல் மாகாண ஆளுநராக ராஜா கொல்லுரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் 2020 ஆகஸ்ட் 31 சத்திய பிரமாணம் செய்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனவரியில் புதிய ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தி யாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ் வாறு கூறியுள்ளார்.

ஜனவரி மாதமளவில் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக கருத்துக்கள் நிலவுகின்றன. இதற்காக பஸில் ராஜபக்ஷ மற்றும் ரணில் விக் கிரமசிங்க ஆகிய இருவரின் பெயர் கள் கூறப்படுகின்றன. சர்வதேச தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொள்வதற்கான நோக்கத்திலேயே ரணிலை நியமிக் கவுள்ளதாக கூறப்படுகின்றது. இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றீர்கள் என்று ஊடகவிய லாளர் கேள்வியெழுப்பினார்.

அதன்போது பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

இந்த கேள்வியில் எந்தவித அடிப் படையும் கிடையாது. அவ்வாறாக எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்ப டவில்லை. இதில் எந்தவொரு உண் மையும் கிடையாது.

## சபை அமர்வுகளில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி நேற்று முன்தினமும் மற்றும் நேற்றும் அவர்கள் சபைக்குள் வந்திருக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அரு கில் அந்தக் கட்சியினர் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து நேற்று பிற்பகல் சபாநாயகருக்கும் ஐக் கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் இடையே விசேட கலந்துரையாட லொன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது இன்று முதல் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள அவர்கள் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

## விவாதம் இன்றியே ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை சுற்றாடல் அமைச்சு ,வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாது காப்பு அமைச்சு,கடல்தொழில் அமைச் சு, மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு யானைவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல், உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக் கம் ,வளவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,அலங்கார மீன்கள், நன் னீர்மீன்கள், இறால்களை வளர்த்தல், கடல்தொழில் துறைமுக அபிவிருத்தி, பலநாள் கடல்தொழில் அலுவல்கள் மற் றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான விவாதம் இடம் பெறவிருந்த போதும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே .வி.பி.யும் சபை அமர்வை இரண் டாவது நாளாகவும் புறக்கணித்ததால் விவாதத்தை சம்பிரதாயப்படி ஆரம் பிக்க முடியாத காரணத்தாலே நேற்றும் விவாதங்கள் இடம்பெறவில்லை.

## வடக்கில் 3 தீவுகளிலும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களை அறிவிக்கும் செய்தி யாளர் சந்திப்பில், வடக்கில் மூன்று தீவுகளில் முன்னெடுக்கவுள்ள சூரிய சக்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு தொடர்பில் முன்வைக்கப் பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு வடக்கில் மூன்று தீவுகள் தொடர்பான வேலைத்திட்டத்தை இடைநிறுத்துவ தாக சீனத் தூதரகம் கூறியுள்ள நிலை யில், அந்தத் திட்டங்களை இந்தியா வின் அதானி நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்றும், உர கப்பல் தொடர்பான பிரச் சனையை தொடர்ந்து சீனாவுடனான உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ள தா? என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். இதன்போது பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரன கூறுகையில்,

அந்தத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இதேவேளை உரப் பிரச்சினையில் இருநாடுகளுக்கும் இடையே நட்புறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

## யாழில் கரையொதுங்கும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் அடுத்தடுத்து கரையொ துங்கின. இச்சடலங்கள் தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளிவர வில்லை. காணாமல் போனவர்கள் பற் றிய தகவல் வெளிவராத நிலையில் இந்த சடலங்கள் கரை ஒதுங்குகின்றமை சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்கி வருகின்றன எனில் கடலில் விபத்துக் கள் நடைபெற்று இருக்க வேண்டும். ஒன்றில் இலங்கை மீனவர்கள், அல்லது இந்திய மீனவர்களினது மீன் பிடி படகு கள் விபத்துக்கு உள்ளாகி இருக்க வேண் டும். ஆனால் அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக தகவல் இல்லை.

இதனால் காணாமல் போனவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர்.

ஆனால் அரசாங்கம் இது குறித்து எந்த விசாரணைகளையும் முன்னெடுக்கவில் லை. மக்களுக்கு விபரங்களை விரைந்து கொடுக்க வேண்டும். பொலிஸ், கடற்படை மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே பொலிஸார் மற்றும் கடற்படை ஆகியவை இந்த சம்பவங்கள் தொடர் பில் விசாரணைகளை தீவிரப்படுத்தி இதன் பின்னணியில் உள்ள விபரங் களை விரைவாக வெளிப்படுத்த வேண் டும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரினார்.(40)

## தமிழ் தேசிய வாழ்வுரிமை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோணத்தில் கேள்விகள் தொடுத்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட் டது. குறித்த விசாரணைகள் ஊடாக எம்மை சிவில் சமூக செயற்பாடுக ளில் இருந்து எமது சன நாயக குரல் வளையை நசுக்கும் விதமாகவே அவர்களின் கேள்விகள் காணப்பட்ட தாக சிவகரன் தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களை வலுப்ப டுத்த வேண்டும் என்று சர்வதேச அரங்கில் ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் மறுபுறத்தில் சிவில் அமைப் புக்களை நசுக்க அரசின் புலனாய்வு அமைப்புகள் முனைகின்றன.

அரசின் இவ்வாறான நெருக்கடிக ளைக் கண்டு நாம் அச்சப்படப் போவ தில்லை. இவ்விதமான விசாரணை கள் எமக்கு புதியவை அல்ல.

எமது சமூகப் பணி தொடர்ந்தும் தொடரும். சிவில் சமூக அமைப்புக் களை இலங்கை அரசு தொடர்ந்து நசுக்க முனைவது வேதனைக்குரிய விடயம் என்று சிவகரன் மேலும் தெரி வித்தார்.

### -சபைகளின் பாதீட்டை தோற்கடித்து-

# ஆணையாளர்களின் கீழ் சபைகளை கொண்டுவருவது பேராபத்தான முடிவு



உள்ளூராட்சி சபைகளை தோற்கடித்து ஆங்காங்கு ஆணையாளரின் கீழ் சபைகள் கொண்டுவரப்படுமாயின் அதைப் போல ஒரு மோசமான நிலை இருக்காது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களின் செயற்பாடுகளில் பிழைகளை கண்டு இருக்கலாம். அல்லது அவர்கள் நன்றாக செயற்படுகிறார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இவற்றை உடைக்க வேண்டும் ஆயின் அவர்களை தோற்கடிக்க வேண்டும்.

கட்சிகளின் சுயநலத்தின் அடிப்படையில் தான் அவை தோற்கடிக்கப்படுகிறது. தங்களின் கட்சி சார்ந்த தேவைகளுக்காக தோற்கடிக்கின்றார்கள்.

உள்ளூராட்சி சபைகளின் காலம் வருகின்ற ஏப்ரல் மாதமளவில் முடிவடையவுள்ள நிலையில், அதனை 6 மாத காலப்பகுதிக்கோ, ஒரு வருட காலபகுதிக்கோ அந்த சபைகளை நீடிக்க கூடும் என நிச்சயமாக நம்புகிறேன். ஏனெனில் இன்றைய கள சூழலில் அரசாங்கம் புதிய தேர்தலை நடத்தும் நிலைக்கு போக மாட்டாது.

ஆகவே அவ்வாறான சூழலில் உள்ளூராட்சி சபைகளை தோற்கடித்து ஆங்காங்கு ஆணையாளரின் கீழ் சபைகள் கொண்டுவரப்படுமாயின், அதைப்போல ஒரு மோசமான நிலை இருக்காது. எனவே மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் இருப்பது நல்லது.

வடக்கு மாகாண சபை இல்லாததால், ஆளுநர்கள் வந்து என்ன செய்கிறார்கள் என கண்களால் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

அதேபோல உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு இந்த கதி ஏற்படுமாயின் , ஒட்டுமொத்தமாக அரசாங்கம் தான் விரும்பியதை செய்யும். அதற்கு நாங்கள் களம் அமைத்து கொடுத்தவர்களாக இருப்போம். ஆகவே இதொரு சரியான நடவடிக்கை இல்லை என்றார். (40)

### -தென்னை, பனை அபிவிருத்தியை-

# இலக்காக கொண்டு வடக்கு நபர் இணைப்பு செயலாளராக நியமனம்



பெருந் தோட்ட அமைச்சால் இலங்கையின் இரண்டாவது தென்னை முக்கோணம் என்ற எண்ணக்கரு வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

இதன் மூலம் எதிர்காலத்தில் தீவகம் உட்பட ஒரு இலட்சம் ஏக்கரில் வடக்கில் தென்னை அபிவிருத்தியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும், நிறுவன ஸ்தாபகருமான சமுக ஜோதி அனோக் பெனடிற் வடக்கு தென்னை அபிவிருத்தி மற்றும் பனை அபிவிருத்தி ஒருங்கிணைப்புச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணாண்டோ அமைச்சின் வடக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்துவதற்காக குறித்த இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நெல் பயிரிட பொருத்தமற்ற 'சி' தர நெல் வயல்களில் தென்னை பயிரிட்டு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த அமைச்சு திட்டமிட்டுள்ளது. மேலும் பனை சார்ந்த நவீன ஆராய்ச்சிகளை தொடங்கியுள்ள அமைச்சினது பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வினைத்திறனான சேவையினை மக்களுக்கு வழங்க எதிர்பார்த்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (30)

# 18 வயதுக்கு குறைவான சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாது

### -பேராசிரியர் சர்வேஸ்வரன்-

18 வயதுக்கு குறைவான சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாத வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

வீட்டு பணியாட்களாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான வயது பற்றிய சட்டத்துக்கு அண்மையில் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் பற்றி பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரனிடம் கேட்டபோது,

2021 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன்னர் 14 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்த முடிந்தது எனவும் பின்னர் 2021 ஜனவரியில் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தால் இந்த வயதானது 16 ஆக அதிகரிக்கப்பட்டது எனவும் கடந்த நவம்பர் 18 ஆம் திகதியன்று அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி, சிறுவர்களை வீட்டு பணியாட்களாக வேலைக்கு அமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதானது, 18 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் விளக்குகையில், பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான சட்டத்தின் கீழ் 18 வயதுக்கும் குறைவான சிறுவர்களை வேலைக்கு அமர்த்த தடை செய்யப்பட்ட ஆபத்தான வேலைகள் பற்றிய ஒழுங்குவிதிகள் 2021 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கு விதிகளில் வீட்டு பணியாட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய இன்றுள்ள சட்டத்தின்படி 18 வயதுக்கும் குறைவான வயதுள்ள சிறுவர்களை வீட்டுப் பணியாட்களாக வேலைக்கு அமர்த்த முடியாது என்றார்.

# நுவரெலியா மாவட்டத்தில் 5 அடுப்புகள் வெடித்தன

நுவரெலியா நகரம் மற்றும் நுவரெலியா மாகொட ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நேற்று மதியம் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ளன.

குடியிருப்பாளர்கள் காஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்த போது, திடீரென காஸ் அடுப்பு வெடித்ததால், காஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் நுவரெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நானுஓயா எடின்புரோ தோட்டத்திலும், பூண்டுலோயா ஹெரோ தோட்டத்திலும், அட்டன் வெளிஓயா மேற்பிரிவு தோட்டத்திலும் நேற்றைய தினம் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

### -குழந்தைகள் பிறந்த உடனேயே-

# பிறப்புச் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டை இலக்கம்

**ந.ஜெயகாந்தன்**

குழந்தைகள் பிறந்த உடனேயே அவர்களின் பிறப்புச் சான்றிதழுடன் தேசிய அடையாள இலக்கத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் பிறக்கும் எந்தவொரு பிள்ளையும் பிறப்பின் போது பதிவு செய்து அப்பிள்ளைக்கு தேசிய பிறப்புச் சான்றிதழை வழங்கும் அதிகாரம் பிறப்பு மற்றும் இறப்பைப் பதிவு செய்யும் சட்டத்திற்கமைய பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலை பேணுதல் மற்றும் 15 வயதை அடைந்தவர்கள் மற்றும் அடையவுள்ள இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பத்திற்கமைய அவர்களைப் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையை வழங்குதல், ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலங்கை அடையாள இலக்க) கட்டளையின் பிரகாரம் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் இலங்கை அடையாள இலக்கத்தை வழங்குவதற்காகவும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரே அடையாள இலக்கத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் போது குறித்த நடவடிக்கைகளை இலகுவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இலங்கையர்களுக்கு வருங்காலங்களில் வாய்ப்புக் கிடைக்கும்.

அதற்கமைய, ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணையவழியூடான இலங்கை அடையாள இலக்கத்தை பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு வெளியிடுவதற்கும், குறித்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் மூலம் குறித்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### -இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன-

**ந.ஜெயகாந்தன்**

எரிவாயுவை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அதனுடன் தொடர்புடைய எந்தவொரு நிறுவனங்களும் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்று தெரிவித்துள்ள நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போத அவர் மேலும் கூறுகையில்,

லிட்ரோ மற்றும் லாப் நிறுவனங்கள் தரத்துடன் இறக்குமதி செய்யப்பட்டுள்ள எரிவாயுவை மாத்திரம், கசிவின் போது நாற்றம் வீசக்கூடிய திரவத்தை மாத்திரம் உள்ளடக்கி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அந்த எரிவாயு சிலிண்டர்களில் புதிய அடையாள ஸ்ரிக்கர்களுடன் அதனை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எரிவாயுவை நாட்டுக்கு கொண்டு வரும் போது அதனை இறக்க முன்னர் அது தொடர்பாக ஆராய்ந்து அது தரமாக இருக்கும் போதே அதனை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தைக்கு விநியோகிக்கும் போது நுகர்வோர் அதிகாரசபையின் கண்காணிப்புடன் அதனை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிறுவனங்களின் அதிகாரிகள் தீர்மானம் எடுப்பர்.

கடந்த காலங்களில் எரிவாயு தொடர்பான விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் எரிவாயு தொடர்பிலோ அது தொடர்பான உபகரணங்கள் தொடர்பாகவோ எந்தவொரு நிறுவனங்களும் ஆய்வு செய்திருக்கவில்லை. அத்துடன் அது தொடர்பான நிறுவனங்கள் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தினாலும் அதனை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பதனை குறிப்பிட வேண்டும்.

இந்த பொறுப்பில் இருந்து எந்தவொரு நிறுவனங்களும் விலகிச் செயற்பட முடியாது. இத தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்றார்.

# பருத்தித்துறை பகுதியில் பொலிஸால் கஞ்சா மீட்பு



வடமராட்சி பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் சுமார் 25 கிலோ பெறுமதியான கஞ்சா நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது பருத்தித்துறை கடற்பகுதி ஊடாக கடத்தப்பட்டு விற்பனை செய்யும் நோக்கில் மறைத்து வைத்ததாக சந்தேகிக்கப்படும் கஞ்சா பொதிகளே இவ்வாறு அமைக்கப்பட்டதாக அறியக் கிடைத்தது. சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(75, 21)

# ஐஸ், கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்



வடமராட்சி-துன்னாலை பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொன்னாலைப் பகுதியில் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நெல்லியடி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(75)

# எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை அகற்றக் கோரி யாழில் போராட்டம்



யாழ்ப்பாணம்-வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டடி பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலையை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு மக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது எமது உயிருக்கு யார் உத்தரவாதம், நாம் ஆரோக்கியமான சந்ததியாய் வாழ வழிவிடு, தரமற்ற எரிவாயுக் கசிவால் ஏற்படும் ஆபத்துக்கு யார் பொறுப்பு என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஜே/81 கிராம சேவகர் பிரிவை சேர்ந்த மக்கள் ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையம் ஊடாக இந்த களஞ்சிய சாலை மூலம் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு உள்ளதாகவும் , களஞ்சிய சாலைக்கு முன்பாக கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதனால், போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாகவும், குறிப்பாக அருகில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டு, உடனடியாக அங்கிருந்து குறித்த களஞ்சியசாலையை அகற்றுமாறு, யாழ்ப்பாண பிரதேச செயலர், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர், நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்டோருக்கு இந்த ஆண்டு ஆரம்பத்தில் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

அதேவேளை அப்பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து நகர அபிவிருத்தி அதிகார சபை, எரிவாயு களஞ்சியத்தின் பாதுகாப்பு ஒழுங்குகள் அயலவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டும். ஆதனத்திற்குள் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கட்டடத்திற்கான அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தால் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என குறித்த களஞ்சியசாலை உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
புதன்கிழமை 08 டிசம்பர் 2021 Wednesday 08th December 2021

## கவனத்தில் எடுக்க அவசியமான ஐ.நா. விசேட அறிக்கையாளரின் பரிந்துரைகள்

ஆண்டான் –அடிமை கட்டமைப்பு வேரறுக்கப்பட்டு விட்டதாக பெருமையாக கூறப்படுகின்றபோதிலும் ஏதோவொரு வடிவத்தில் அடிமையாக நடத்தப்படுத்தல் தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது. இலங்கையில் பிள்ளைகள் , பெண்கள், இன சிறுபான்மையினர் , முதியவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மத்தியில் சமகால அடிமைத்தனம் இருப்பதாக கடந்தவாரம் இலங்கைக்கு வருகைதந்திருந்த தற்கால அடிமை முறைகள் பற்றிய ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் டொமோயோ ஒபோகாட்டா கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.அதேசமயம் அடுத்த ஆண்டு செப்டெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதாக நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் உள்ள சிறார்களில் சுமார் 1% மானோர் சில வகையான சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள், சிறுபிள்ளைகள் வீட்டு வேலை விருந்தோம்பல், துப்புரவு செய்யும் வேலையிலும் ஏனையவர்கள் சுற்றுலாத் துறையில் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகிறார்களெனவும் ஒபோகாட்டா குறிப்பிட்டுள்ளார் .தேயிலை மற்றும் இறப்பர் தோட்டப் பகுதிகள் போன்ற தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறுவர் தொழிலாளர்கள் அதிகளவில் உள்ளதாகவும் அங்கு பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளியேறி தமது குடும்பத்தை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அடிமைத்தன வடிவங்களில் பாரம்பரிய அடிமைத்தனம், கட்டாய வேலை , கடன் அடிமைத்தனம், வேலை செய்யும் பிள்ளைகள் அடிமை போன்று நடத்தப்படும் நிலைமைகள், வீட்டு அடிமைத்தனம், பாலியல் அடிமைத்தனம் போன்றவை பற்றி மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறுகிறது.அதேவேளை இலங்கையில் சமகால அடிமை முறைகள் இனப் பரிமாணத்தைக் கொண்டிருப்பதை தான் பார்த்துள்ளதாக ஒபோகாட்டா கூறியிருக்கிறார். 'குறிப்பாக, 200 ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் அவர்களின் பூர்வீக அடிப்படையில் பல்வேறு வகையான பாகுபாடுகளை தொடர்ந்து எதிர்கொள்கின்றனரெனவும் பெருந்தோட்டத் தமிழர்களுக்கு சொந்தமாக நிலம் இல்லாததால், காலனித்துவ காலத்தில் கட்டப்பட்ட லயன் வீடுகளில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ள அவர், அவர்கள் வாழும் விதத்தையிட்டு தான் மிகவும் வருத்தப்பட்டதாகவும் ஐந்து முதல் 10 பேர் வரை சிறிய இடங்களில் அடைபட்ட நிலையிலுள்ளனரென்றும் முறையான சமையலறை அல்லது கழிப்பறை அல்லது குளியலறை வசதிகள் இல்லையெனவும் மோசமான நிலைமை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருப்பதுடன், இது தொடர்பாக ஏதாவது செய்யுமாறு அரசாங்கத்திற்கு தான் பரிந்துரைத்துள்ளதாகவும்' ஒபோகாட்டா கூறியுள்ளார்.

அதேவேளை நாட்டில் தற்கால அடிமைத்தனத்தை தடுத்து நிறுத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கு அவர் பரிந்துரைத்திருக்கும் பல விடயங்கள் ஆக்கபூர்வமானவையாகத் தென்படுகின்றன. முத்தரப்பு சுயாதீன பொறிமுறையின் மூலம், தற்போது நடைமுறையில் உள்ள தேசியமட்டத்திலான குறைந்தபட்ச ஊதியத்தின் சரியான தன்மையை மதிப்பீடு செய்யுமாறும் பணவீக்கம் மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப தேவையான மாற்றங்களைச் செய்யுமாறும் முறைசாரா பொருளாதாரத்தில் இருக்கும் வீட்டு வேலை மற்றும் ஏனைய துறைகளை தொழிலாளர் சட்டத்தில் சேர்த்து முறைப்படுத்துமாறும் 2025க்குள் சிறுவர் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களுக்கு முடிவு கட்டுமாறும் பிள்ளைகள் பாடசாலைகளில் கல்வி கற்பதையும் ,பாரபட்சம் இல்லாமல் அனைவரும் தரமான கல்வியை சமமாகப் பெறுவதையும் உறுதிசெய்யுமாறும் அவர் பரிந்துரைத்துள்ளார் . மேலும் பெண்கள், பிள்ளைகள் இன சிறுபான்மையினர் உட்பட அனைவரும் அணுகக்கூடியதாக அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கான தற்போதைய முறைப்பாடு தெரிவிக்கும் முறைமைகளை வலுப்படுத்துமாறும் நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக முறையானதும் சுதந்திரமானதுமான விசாரணையை நடத்துமாறும் நியாயப்படுத்தப்படாத மற்றும் அதிகப்படியான கடன்களை தள்ளுபடி செய்து, வட்டி எல்லைகள் உட்பட அவற்றின் மீது பயனுள்ள கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை அறிமுகப்படுத்துமாறும் சேமிப்பு மற்றும் கடன் (சிக்கன) சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மூலம் கடன் பெறுவதை உறுதி செய்யுமாறும் போதுமான வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் தொழிலாளர் பரிசோதகர்களை வலுப்படுத்துமாறும் தொழிலாளர்களை சுரண்டும் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் ,தொழிற்சங்கங்கள் மத்தியில் அச்சத்திற்கான கலாசாரத்தை உருவாக்கியுள்ள தொழிலாளர் படையின் இராணுவமயமாக்கலுக்கு தீர்வு காணுமாறும் பாலியல் தொழிலாளர்கள் சுரண்டப்படும் அபாயம் அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாடுகடந்த நிறுவனங்கள் உட்பட இலங்கையில் இயங்கும் அனைத்து வணிகங்களும் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டல் கோட்பாடுகளை மதிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துமாறும் அனைத்து தொழிலாளர்களின், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துமாறும் ஒபோகாட்டா பரிந்துரைத்திருக்கிறார் .இலங்கையில் தற்கால அடிமைத்தனத்தின் முக்கிய காரணங்களில் ஒன்றான இன மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாட்டை நிவர்த்தி செய்யுமாறும் சிவில்சமூக அமைப்புகள்,தொழிற்சங்கங்கள்,தொழிலாளர்கள் அரசாங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடவும் ஒன்றுபட்டு தீர்மானங்களை எடுக்கவும் சம்பந்தப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய அமைப்பை நிறுவுமாறும் யோசனை தெரிவித்திருக்கும் ஐ. நா. வின் விசேட அறிக்கையாளர் அனைத்து தொழிலாளர்களையும் கட்டாய உழைப்பு மற்றும் ஏனைய நவீன அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்க சட்டங்கள் மட்டும் போதாது என்பதை வலியுறுத்த விரும்புவதாகவும் இவற்றை செயற்பாட்டின் மூலம் வலுப்படுத்தப்படுவதுடன் , அரசியல் விருப்பத்தால் ஆதரிக்கப்பட வேண்டுமெனவும் பயனுள்ளவையாக இருக்க தேவையான பொருள் மற்றும் மனித வளங்களுடன் மேம்படுத்தப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.அனைவரும் கௌரவமான தொழிலைப் பெறுவதற்கும் சமகால அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் சகலரையும் உள்ளீர்த்த சமுதாயத்தை உருவாக்குவதும் அவசியமென்று தான் நம்புவதாக அறிக்கையாளர் தெரிவித்திருக்கும் பரிந்துரைகள் இலங்கையை போன்ற பன்மைத்தன்மை வாய்ந்த சமூகங்கள் வாழும் நாட்டுக்கு அதிகளவுக்கு நன்மையளிக்கும்.

# அரசியல் வனாந்தரத்திலிருந்து வெளிவருவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு 'மக்களிடம்' திரும்ப வேண்டும்



குசல் பெரேரா

ஒருவர் விரும்பாதபோதும், காரணங்களுக்காக இணங்கிக்கொள்ளாத போதும் முதல் பக்கத்தை பிடித்துக்கொள்கிறார். கனடாவின் ரொறன்ரோவில் நவம்பர் 20 சனிக்கிழமையன்று இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் துரதிர்ஷ்டவசமான அனுபவத்தை கொண்டிருந்தார் . புலிகளின் ஆதரவுக் குழுவென குற்றம்சாட்டப்பட்டவர்களினால் இடையூறு விளைவிக்கப்பட்டது.எமது பாராளுமன்றத்தில் சுமந்திரன் மீது 'புலிகள்'என்று சிங்கள பௌத்த பெரும்பான்மையினரால் கூச்சலிடப்படுவதுண்டு. இம்முறை தொலைதூரத்தில் கனடாவில் 'புலிகள் ' ஆல் கூச்சலிடப்பட்டு அவமதிக்கப்பட்டது.

இங்கு கவனம் செலுத்துவது அந்த வகுப்புவாத அடாவடித்தனம் ஒருவர் கண்டிக்கவும், குறை கூறவும் தயங்காத அந்த வகுப்புவாத அடாவடித்தனம் பற்றியதல்ல . போருக்குப் பின்னரான இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை கொழும்பின் வசதிக்காக எவ்வாறு உயரடுக்கு அரசியலை விளையாடுவதற்காக'வேர் கற்றை'யுடன் இடமாற்றம் செய்யப்பட்டது. மற்றும் எந்தவொரு நாடும் மக்களும் இதுவரை பெற்றிராத அனுதாபம் மற்றும் ஆதரவுக்காக பரப்புரை செய்யும் மேற்குலக வல்லரசு குழுக்களை அவர்கள் எவ்வாறு கட்டுப்படுத்தினர் மற்றும் சார்ந்து இருந்தனர் என்பது பற்றியதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் அரசியலையும் முழுமையாகக் கட்டுப்படுத்தும் 'சமஷ்டிக் கட்சி ' என்று அழைக்கப்படும் இலங்கைத் தமிழ் அரசு கட்சியுடன் கதை தொடங்குகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் புளொட் மற்றும் ரெலோ இன்னும் எஞ்சியிருப்பது சிங்கள அரசியலில் 'வாசுகள், திசாஸ்கள் மற்றும் டியூக்கள்' போன்ற அரசியல் நிராகரிப்புகளாகும். மூத்த அரசியல்வாதியான ஆர்.சம்பந்தன் தலைமையில், 2009 மே மாதம் போர் இராணுவ ரீதியாக முடிவடைந்த பின்னர், அவர்கள் தீவிர அரசியலுக்கு வந்தபோது,தமிழரசுக் கட்சி தலைமைத்துவ நெருக்கடியில் இருந்தது. சம்பந்தனுக்கு அவருக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை கைப்பற்றுவதற்கு நிச்சயமாக ஒரு 'முடிக்குரிய இளவரசர்' தேவைப்பட்டார்.

செல்வநாயகம் அவரின் அரசியல் விவரணத்தை அவரே வர்ணித்திருந்ததன் பிரகாரம் 'மதத்தால் கிறிஸ்தவர் மற்றும் கலாசாரத்தால் இந்து' என்ற தந்தை செல்வாவை பற்றிய அரசியல் புரிதல், மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனிடம் சம்பந்தன் மிகவும் உறுதியான 'நவீன எஸ்.ஜே.வி.' யைக் கண்டிருக்கலாம். புதுக்கடை வட்டாரங்களிலும் உரிய மரியாதையைப் பெற்ற சுமந்திரன், இணுவிலை பூர்விகமாகக் கொண்ட வேளாள மரபினராகவும் தென்னிந்திய திருச்சபையுடனான அவரது தொடர்புகள் மற்றும் ஒரு கிறிஸ்தவ மெதடிஸ்த்தை கடைப்பிடிப்பதன் மூலம் தன்னை முன்கூட்டியே தகுதிப்படுத்திக்கொண்டார். 2010 தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் 2 வருடங்களில் தமிழரசுக் கட்சியின் இரண்டு உதவிச் செயலாளர்களில் ஒருவராக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதும் சம்பந்தனுக்கு அடுத்த வரிசையில் முன்னிறுத்தப்படுவதும் விரைவான வேலையாகும். அத்துடன் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராகவும் ஆனார்.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் தமிழரசுக் கட்சித் தலைமையானது ஐ.தே.க.தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தொடர்வதை உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் இருந்ததுடன், 2015 ஆகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வெளிப்படையாக ஆதரித்தது. பிரதமர் விக்கிரமசிங்க மீதான அவர்களின் நம்பிக்கை மிகவும் கண்மூடித்தனமானது. சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் மக்களுக்கு 2016 டிசம்பர் இறுதிக்குள் 'புதிய அரசியலமைப்பு'மூலம் முழுமையானதும் இறுதியானதுமான அரசியல் தீர்வு பற்றி உறுதியளித்தார்.



வடக்கு–கிழக்கில் 16 தமிழ் த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைத் தெரிவுசெய்த தேர்தல் முடிவடைந்ததுடன், தலைமை கொழும்புக்குச் சென்றதுடன், ஏனைய பங்காளிகள் வெளியேறினாலும் கூட, நல்லாட்சி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை உறுதிசெய்வதில் முழுமையாக தயார்நிலையில் இருந்தது. அவர்கள் புதிய அரசியலமைப்பு தொடர்பான வாக்குறுதியின் அடிப்படையில்இருந்தனர். சுமந்திரன் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தார். ஒருங்கிணைந்த, பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டிற்கான அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தில் இருந்ததை விட மிகவும் அதிகளவுக்கு பகிரப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். காணாமல் போனவர்கள், அன்றாட வாழ்க்கையில் இராணுவத் தலையீடுகள், சிங்களக் குடியேற்றங்கள், இடப்பெயர்வுகள் மற்றும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து வடக்கு, கிழக்கில் பாரிய போராட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்தப்பட்டு அரசாங்கத்தை தர்மசங்கடத்திற்கு தள்ளுவதை அவர்கள் விரும்பியிருக்கவில்லை.

2016 இன் ஆரம்பத்தில் வருகை தந்த ஐரோப்பிய தூதுக்குழுவுடன் நான் நடத்திய கலந்துரையாடலில் 2016 இன் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் சிந்தனை தெளிவாக வெளிப்பட்டது. 'நல்லாட்சி 'அரசாங்கத்தின் போது எந்த நேரத்திலும் புதிய அரசியலமைப்பு இருக்காது என்பது எனது கணிப்பு . அவர்கள் திகைத்துப்போய், என்ன புதிய அரசியலமைப்பு இல்லையா? என்று கேட்ட அவர்கள் , 'நேற்று நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையைச் சந்தித்தோம். அது அவர்களின் பங்களிப்புடன் எழுதப்படுவதாகவும் இந்த ஆண்டு இறுதிக்குள் தயாராக இருப்பதாகவும் அவர்கள் எங்களிடம் தெரிவித்தனர்' என்று எனக்குக் கூறினர். உள்ளீடுகளை வழங்கும் அரசியலமைப்பு வரைவை பிரதமர் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் முன்வைப்பார் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. அரசியல் ரீதியாக அவர்கள் விரும்பியதும் உழைத்ததும் அதுதான்.

தென்னிலங்கை அரசியலைப் பற்றிய தமிழரசுக் கட்சியின் கணிப்பு முற்றிலும் கடினமானதாகவிருந்ததுடன் தெற்கில் உள்ள மிகவும் இனவாத சிங்கள அரசியல் கட்சியுடன் அவர்களை இழக்கச்செய்துவிட்டது. 1948 இல் மலையகத் தமிழர்களின் உரிமைகளை நீக்கி குடியுரிமை நீக்கம் செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டம் அறிமுகம், 1979 இல் தமிழ் மக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்கள், 1981 ஜூன் மாதம் புகழ்பெற்ற யாழ். நூலகம் எரிப்பு மற்றும் 83 ஜூலை தமிழினப் படுகொலை போன்ற கொடூரமான இனவாத தலையீடுகளின் நீண்ட பட்டியலில் ஐ.தே.க. வினர் இன்றைய ராஜபக்ஷக்களின் அரசியலைவிட சிறந்த சிங்களபௌத்தர்களாக இருக்க போட்டியிடுகின்றனர். எனவே நான் ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் மிகவும் சாதாரணமாக, 'சரி, நீங்கள் மீண்டும் வருவீர்களானால் அடுத்த வருடம் அதைப் பற்றி பேசலாம்' என்று கூறி அவர்களிடம் விடை பெற்றேன்.

ஐ.தே.க.தலைமையின் மீது அதிக நம்பிக்கையுடனான கொழும்பை மையமாகக் கொண்ட தமிழரசுக் கட்சியின் அரசியல், தெளிவான முன்னோக்கு இல்லாமலும் பொதுமக்கள் பங்கேற்புக்கான நடைமுறை வேலைத்திட்டம் இல்லாமலும் சிறிய குழுக்களுக்கு வடக்கு–கிழக்கு போராட்டங்களில் இடம் கொடுத்தது.

அவர்கள் இந்த 2020 ஆகஸ்ட் தேர்தலில் தெளிவாகக் காணக் கூடிய வகையில் தமிழ் அரசியலை உடைத்துள்ளனர். 2015 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களில் வெற்றிபெற்றிருந்த நிலையில் 10 ஆகக் குறைக்கப்பட்டது. இதற்கு முன்னர் 516,000 க்கும் அதிகமான வாக்குகளில் இருந்து 327,000 வாக்குகளாக குறைவடைந்தன. நான்கு தமிழ் குழுக்களுக்கு இடையில் உடைவடைந்து ஆறு ஆசனங்களை இழந்தனர்.


துரதிர்ஷ்டவசமாக, தமிழரசுக் கட்சியினர் அவர்களின் அரசியல் தோல்வியிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அரசியலமைப்பின் வரைவு நகல் கூட கையில் இல்லாமல் மற்றும் தேர்தல் பிரசன்னம் மோசமாகக் குறைக்கப்பட்டது. எந்தவொரு குறுங்கால தொழிற்சங்க செயற்பாட்டாளர் கூறும் அடிப்படை அம்சங்களைக் கூட அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர்களின் வெளிப்படையான ஆதரவு இல்லாமல் எந்த பேரப் பேச்சும் வெற்றியடையாது. அரசியலில் தலைவர்கள் எதற்காகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதை வீதியில் இறங்கி வலியுறுத்த மக்கள் தேவைப்படுகிறார்கள். ஒரு அரசியல் கட்சியின் பலம் என்பது அது பாராளுமன்றத்தில் இருப்பது மட்டும் அல்ல, மாறாக அது வீதிகளில் இருக்கும் பலம்.

மக்களுடன் இணைந்து உணர்வுபூர்வமாக அரசியலுக்கு வருவதற்குப் பதிலாக, சுமந்திரன், இளம் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுடன் மேற்கத்திய சக்திகளின் ஆதரவை நாடி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். நவம்பர் 27 அன்று சுமந்திரன் ட்வீட் செய்ததாவது, 'அமெரிக்கா, கனடா மற்றும் பிரிட்டனில் தமிழ்க் கூட்டமைப்பு நடத்திய சந்திப்புகள், கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுக்கள் மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை' என்று குறிப்பிட்டு, ஜனாதிபதி பைடனின் கீழ் அமெரிக்கா மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு திரும்பியுள்ளது என்று மேலும் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா பிரவேசம் என சுமந்திரன் மகிழ்ச்சியுடன் ட்வீட் செய்திருப்பது பரிதாபத்திற்குரியது. அமெரிக்காவின் சிறப்பு என்ன? 2013 ஆம் ஆண்டிற்குள் 131 ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் மற்றும் 45 ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை முடக்குவதற்கு அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் சிறப்பு. பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரத்துடன், இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலில் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தொடர ஊக்குவிக்கிறது (1983 இன் 36 /226 ஏ மற்றும் பி மற்றும் 1984 இன் ஏ /ஆர் .ஈ . எஸ். /39/146 தீர்மானங்களைச் சரிபார்க்கவும்).

2003 மார்ச்சில் அமெரிக்கா ரொனி பிளேயரின் பிரிட்டன் உட்பட கூட்டணி பங்காளிகளுடன் ஈராக் மீது படையெடுத்தமை , ஐ.நா. சாசனத்தை மீறிய 'சட்ட விரோதமானது' என்று அச்சமயம் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் பி.பி.சி. உலக சேவையிடம் கூறியிருந்தார்.

06 ஆம் பக்கம் பார்க்க ...



# நல்லூர் பிரதேச சபையின் பாதீடு நிறைவேறியது



நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று; தவிசாளரினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சை குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தல ஒரு உறுப்பினர் என 12 உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த அதே வேளை,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்கள் என 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தார்.

இதனால் தவிசாளரினால் கொண்டுவரப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் 6 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 5 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், சுயேட்சை குழு சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (40)

# மாந்தை கிழக்கிற்கு பேருந்தை தொடர்ந்து இயக்க கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை தனியார் பேருந்து சங்கத்தினர் நடைமுறைப்படுத்தாதன் காரணமாக மாந்தை கிழக்கு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை கிழக்கில் தனியார் பேருந்து காலையில் மாணவர்களை ஏற்றி பல பாடசாலைகளுக்கு கொண்டு சென்று விடுகின்றது. மல்லாவி மத்திய கல்லூரி வரை இப்பணி தொடர்கின்றது. ஆனால் மாணவர்கள் பாடசாலைகள் முடிந்தவுடன் வீடு திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவை இடம் பெறாததன் காரணமாக காலையில் பாடசாலைகளுக்கு செல்கின்ற மாணவர்கள் பிற்பகலில் வீடு திரும்ப முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்குச் சென்று அழைத்து வருகின்ற நிலைமை தொடரும் நிலையில் கடந்த 02-ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து துறையினருடன் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, அதற்கான இணக்கப்பாடுகளும் தனியார் பேருந்து சங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்று திங்கட்கிழமையும் பேருந்து சேவை வாக்குறுதி அளிக்கப்பட்டதன் படி நடைபெறாததன் காரணமாக மாணவர்கள் வீதிகளில் பேருந்துக்காக காத்திருந்து வீடு திரும்பினர்.

தனியார் பேருந்து சங்கம் மாவட்டச் செயலகத்தில் அளித்த வாக்குறுதியினை காப்பாற்றவில்லை. மாணவர்களின் மக்களின் நலன்சார்ந்து தனியார் பேருந்து சங்கம் செயற்பட வேண்டும். மாந்தை கிழக்கு மாணவர்கள் வீடு திரும்புவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் கோரிக்கையாக உள்ளது. (27)

# பக்க பாதைகள் அகற்றப்பட்டுள்ளன

கிளிநொச்சி -பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான வீதிப் புனரமைப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த பக்க பாதைகள் அகற்றப்பட்டு இருப்பதாக பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, பாலாவி வரையான வீதி வேலைகள் இடம் பெறுகின்றன. வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரையான வீதி வேலைகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளன.

பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான 17 கிலோமீற்றர் தூர வீதியில் மதகுகள் பாலங்கள் அமைப்பதற்காக அமைக்கப்பட்ட பக்க பாதைகள் அகற்றப்படாமல் இருந்தன. பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து சம்புவெளி வரை கரியாலைநாகபடுவான், பல்லவராயன்கட்டுக் குளங்களின் வான் வெள்ளம் வழமையாக வீதிகளை மூடிப் பாயும் நிலையில் தற்போது வீதிப் புனரமைப்பிற்காக அமைக்கப்பட்ட பக்க பாதைகள் அகற்றப்படாது விட்டால் குளங்களின் வான் வெள்ளம் பாய்வதில் தடை ஏற்பட்டு போக்குவரத்துகள் பாதிக்கப்படும் என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம்.

இந்நிலையில் தற்போது பக்க பாதைகள் அகற்றப்பட்டு இருப்பதன் காரணமாக குளங்களின் வான் வெள்ளம் இயல்பாக பாயக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (27)

# மாந்தையில் அமைப்புக்களுக்கு தெரியாமல் காணி ஒப்பந்தம்

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியான கரும்புள்ளியான் கிராமத்தில் சேதன பசளை மேற்கொள்வதற்காக 49 ஏக்கர் காணி குத்தகை அடிப்படையில் கொல்லவிளாங்குளம் பகுதியை சேர்ந்த நபரொருவருக்கு வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச மக்கள் பிரதேச செயலாளர் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்

பிரதேச மட்டத்தில் நடக்கின்ற காணி பயன்பாட்டுக்குழு கூட்டத்தில் கிராம அலுவலர்கள் பொது அமைப்புகள் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு பயனாளியால் கோரப்பட்டுள்ள குத்தகை காணி தொடர்பான விபரங்கள்,எந்த பகுதியில் கோரப்படுகின்றன ,கோரப்படுபவர்கள் யார் உள்ளிட்ட தகவல்கள் பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழு கூட்டத்தில் வழங்கப்பட்டு கிராம் அலுவலர் மற்றும் பொது அமைப்புக்களின் ஒப்புதலுடன் மாவட்ட காணி பயன்பாட்டுக்குழுவுக்கு பாரப்படுத்தப்படும்

ஆனால் மேலே குறிப்பிட்ட 49 ஏக்கர் காணி குததகைக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கரும்புள்ளியான் கிராம அமைப்புகளுக்கோ தெரிவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை பிரதேச மக்கள் முன்வைக்கின்றனர்.

அவ்வாறான சம்பவம் தொடர்பில் குறித்த பகுதியின் கிராம அலுவலரை தொடர்பு கொண்டு கேட்டபோது , 49 ஏக்கர் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அது தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை என்றும் மேலதிக தகவல்களுக்கு பிரதேச செயலாளரை தொடர்புகொள்ளுமாறும் அறிவுறுத்தி இருந்தார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் , பிரிவு துணை நிர்வாக அலகுகளாக 15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது, இதில் பல கிராம மக்களுக்கு கிராமங்களுக்குள்ளே வயல் நிலங்களே இல்லாத நிலையில் 49 ஏக்கர் காணிகள் வழங்கப்படுவது எந்தளவுக்கு நியாயப்பாடானதாகும் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (15)

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கக் கோரிக்கை



முல்லைத்தீவு- அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம் எழுந்துள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடல் கரைக்கு அண்மித்த பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெற்று இரட்டைவாய்க்கால் சந்தி வழியாக மணல் வெளியிடங்களுக்கு கடந்த பல மாதங்களாக கொண்டு செல்லப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கு பொலிசார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு இரட்டைவாய்க்கால் சந்தி, மாத்தளன் சந்தி ஆகிய இடங்களில் இராணுவம் பொலிஸ் இணைந்த காவலரண் அமைக்கப்பட வேண்டும் என அம்பலவன்பொக்கணை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதே வேளை மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளில் நடைபெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு முல்லைத்தீவு பொலிசார் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பிய நிலையிலும் அம்பலவன் பொக்கணையில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கின்றது. (27)

# கோண்டாவில் றோ.க. வித்தி. பாடசாலைக்கு குடிநீர் வசதி



கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரும், பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலி பணிப்பாளருமான சரவணையூர் விசு செல்வராசாவின் நெறிப்படுத்தலில் மேற்படி அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளால் பாடசாலைக்கு 81 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் குடிநீர் வசதி நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இதன்மூலம் 42 மாணவர்கள் கல்வி கற்கும் குறித்த பாடசாலையில் நீண்ட காலமாக நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்று கொடுக்கப்பட்டது. அத்துடன், மாணவர்களுக்கு மதிய போசனமும், கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது. கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் நா.தனேந்திரன், செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், இணைப்பாளர் ரி.யோசேப், அறக்கட்டளையின் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் க.சசிகரன், அறக்கட்டளையின் பொருளாளர் கீர்த்தனா, உப தலைவர் எஸ்.சவுந்தரராஜன், உப செயலாளர் இ.சற்குருநாதன், ஆலோசகர் இ.மயில்வாகனம், அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப்பினர்களான வினோத், விது ஆகியோர் கலந்து கொண்டு குடிநீர்த் திட்டத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தனர். (18)

# மறைந்த எழுத்தாளர் ஆனந்தனுக்கு இணுவிலில் உணர்வுபூர்வ அஞ்சலி

கடந்த நவம்பர்-18 ஆம் திகதி தனது 81 ஆவது வயதில் காலமான எழுத்தாளர் இணுவையூர் கே.எஸ். ஆனந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு இணுவை மக்களின் ஏற்பாட்டில் இணுவில் அறிவாலயம், அறிந்திரன் சிறுவர் சஞ்சிகையின் அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல்-10 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவரும், இணுவில் வேரும் விழுதும் அமைப்பின் அமைப்பாளருமான பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் எழுத்தாளரின் உருவப்படத்திற்கு எழுத்தாளரின் குடும்பத்தவர்களால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டதுடன் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்கீத பூஷணம் பொன்.ஸ்ரீ வாமதேவன் பண்ணுடன் பாமாலை பாடினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து ஆசிரியர் ந.தவசோதிநாதன் கே.எஸ்.ஆனந்தன் பற்றி எனும் தலைப்பிலும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் என் நினைவில் கே.எஸ். ஆனந்தன் எனும் தலைப்பிலும், இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் எங்களூர் இலக்கிய கர்த்தா எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் கே.எஸ்.ஆனந்தனை நான் இப்படித் தான் பார்க்கிறேன் எனும் தலைப்பிலும், கவிஞர் வீர பாராட்டுக்குரியவர் கே.எஸ்.ஆனந்தன் எனும் தலைப்பிலும் உரையாற்றினர்.

ஏற்புரையினை எழுத்தாளரின் குடும்பத்தின் சார்பில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் என்.ரி.எஸ்.சுபநாதன் ஆற்றினார். நன்றியுரையை இணுவில் அறிவாலயத்தின் துணைச் செயலாளரும், வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினருமான வ.தனகோபி நிகழ்த்தினார். (18)

# கடந்த வார திடீர் மின்தடையில் நாசகார செயற்பாடுகள் இருந்ததா?

**-விசாரணைகள் நடக்கிறது அமைச்சர் பத்திரண-**



**ந.ஜெயகாந்தன்**

நாட்டில் கடந்த வாரத்தில் இடம் பெற்ற திடீர் மின்தடையின் பின்னால் நாசகார செயற்பாடுகள் இருந்ததா? என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர், கடந்த வாரத்தில் நாட்டில் ஏற்பட்ட மின்தடை தொடர்பில் எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அமைச்சர் கூறுகையில்,

மின்தடை தொடர்பாக தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் பின்னால் யாரேனும் நாசகாரர்கள் செயற்பட்டுள்ளனரா என்பது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளன. இது தொடர்பான விசாரணைகளின் தகவல்கள் வெளியானது. அந்த விடயம் தொடர்பில் கூறமுடியும் என்றார்.

# வாக்களிப்பு நிலையங்களில் எங்களுக்கும் வசதியை ஏற்படுத்தித் தாருங்கள்

## -தேர்தல்கள் ஆணைக்குழு முன் மாற்றுத்திறனாளி ஒருவர் கோரிக்கை-



தேர்தல்கள் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளும் வாக்களிப்பதற்கு ஏதுவான வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள் என மாற்றுத்திறனாளி ஒருவர் தேர்தல்கள் ஆணைக்குழு முன் கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான கருத்தாய்வு நிகழ்விலே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிக்கு ஏற்ற வகையில் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அரசாங்கத்தை சிரமத்துக்குளாக்க விரும்பவில்லை.

மாற்றுத்திறனாளிகள் தமது வாக்குகளை அளிப்பதற்காக பிரத்தியோகமான ஓரிரு நிலையங்களை எமக்கே மற்ற வகையில் அமைத்து தந்தால் போதும் நாம் சுதந்திரமாக வாக்களிப்பில் ஈடுபடுவோம். மேலும் இலங்கையில் அச்சிடப்பட்ட உள்ள நாணயத்தாள்களில் மாற்றுத்திறனாளிகள் விளங்கிக் கொள்ளும் வகையில் எண்கள் பொறிக்கப்பட்டுள்ளதாக பாடசாலைகளில் கூறுகின்றார்கள்.

ஆனால் இலங்கையில் அச்சிடப்பட்டு தற்போது பாவனையில் உள்ள நாணயத்தாள்களில் மறைந்து உள்ள இலக்கங்களை தமது கைகளால் தடவி அறிந்து கொள்ள முடியாது உள்ளது. மாற்றுத் திறனாளிகளை சமூகத்திலிருந்து ஒதுக்காமல் அவர்களையும் சமூகத்தில் ஒரு பிரஜையாக கருதி அவர்களுக்குரிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

மேலும் தேர்தல் கடமைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு வசதியாக உத்தியோகத்தில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளை தேர்தல் கடமைகளில் ஈடுபட வேண்டும். ஆகவே தேர்தல் தொடர்பாக மாற்றுத்திறனாளிகள் என்ற வகையில் எம்மை அழைத்து எமது கருத்துக்களை பதிவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிய அனைவருக்கும் நன்றி. அவரது கருத்து தொடர்பில் பதிலளித்த யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் தாம் கரிசனையாக உள்ளதாகவும் அவர்களின் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடப்படும் என்றார்.

(75)

# கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையினால் பிடிப்பு



புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கட்டாக்காலி கல்நடைகளை பிடிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வீதிகளில் கட்டாக்காலிகளாக நின்ற 75 கால்நடைகளை பிடித்து பிரதேச சபையில் கட்டிவைத்துள்ளார்கள். புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வீதிகளில் நிக்கும் கட்டாக்காலி கால்நடைகளால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன் விவசாய செய்கைக்கும் கால்நடைகள் பாதிப்பினை ஏற்படுத்தி வந்துள்ளன இந்நிலையில் வீதிகளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு பலதடவைகள் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில் நேற்று 75 மாடுகளை பிரதேச சபையினர் பிடித்துள்ளார்கள்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு கால்நடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து தண்டம் அறவிடப்படும் என்றும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளார்கள் பெரிய மாடு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும்,சின்ன மாடு ஒன்றிற்கு ஆயிரம் ரூபாவும் ஒருநாள் பராமரிப்பு இருநூறு ரூபாவும் என அறிவித்துள்ளதுடன்.

கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளார்கள். (15)

# அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் இருநாள் பயிற்சிப் பட்டறை



முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த காலங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை குறைக்கும் முகமாக சர்வோதயா நிறுவனத்தினால் யு.எஸ்.எ நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டில், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒருங்கிணைப்பில் இரு நாள் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அனர்த்த காலங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை குறைக்கும் முகமாக சர்வோதயா நிறுவனத்தினால் யு.எஸ்.எ நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டில், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒருங்கிணைப்பில் இரு வருட காலப்பகுதியை கொண்ட அனர்த்த அபாய தணிப்பு பயிற்சிப் பட்டறையின் தொடர்ச்சியாக இரு கட்டங்களாக மு.ப 9.30 மணிக்கு பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முதல் நாட் பயிற்சிப்பட்டறை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பயிற்சிப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் லிசோ.கேகிதா, மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சு.விக்கினேஸ்வரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் க.லிங்கேஸ்வரகுமார், சர்வோதயா நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சத்தியகுமார் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதனூடாக அனர்த்த காலங்களில் கிராம மட்டங்களில் பணிபுரிகின்ற வகையில் கிராம மட்ட அமைப்புக்களின்; அங்கத்தவர்களுக்கு குறித்த செயற்றிட்டத்தினூடாக அனர்த்த காலங்களில் இடைத்தங்கல் முகாம்களில் முகாமைத்துவம் சார் வழிப்படுத்தல் விடயங்கள் கோட்பாடு மற்றும் செய்முறையாக இருநாட்கள் போதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக மாவட்டத்தில் அதிகளவான அனர்த்தங்களிற்கு ஆளாகும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கள்ளப்பாடு, முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம சேவகர் பிரிவுகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மன்னகண்டல், சுதந்திரபுரம், விசுவமடு மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பேராறு, இந்துபுரம், பண்டார வன்னியன் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அதற்குரிய கிராம மட்ட அமைப்புக்களின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் இ.லிங்கேஸ்வரகுமார் கலந்து கொண்டனர்.

# கடற்படையால் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக மாதகலில் மக்கள் கவனயீர்ப்பு



கஞ்சா கடத்திய சந்தேகத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு ஆதரவாக அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த இருவரும் கடலுக்கு சென்று திரும்பி வரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர். இதன்போது கடற்படையினரின் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்கள் அவ்விடத்தில் நின்றனர். இந்நிலையில் கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கஞ்சாவை அவர்கள் கடத்தியதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப்படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந்நிலையில் 276 கிலோ கஞ்சா அவ்வாறு அந்த படகில் கொண்டு வருவது?

அத்துடன் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ்ஸினை பார்த்தால் சென்றுள்ளார்கள் கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா என தெரியவரும். கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர், 'நீங்கள் காணி சுவீகரிப்பு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தானே' என கேட்டு ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியுள்ளனர். நாங்கள் அவர்களைப் பார்க்கச் சென்ற வேளை அவர்கள் எமக்கு விடயத்தை கூறியுள்ளார்கள்.

எனவே கைது செய்யப்பட்டவர்களை சரியாக விசாரணை செய்து உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (75)

# வீடொன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு



கிளிநொச்சி- இரத்தினபுரம் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் இருந்து வெடிபொருட்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து இரத்தினபுரம் செல்லும் வீதியில் உள்ள நீர் தங்கிக்கு முன்புள்ள தனியார் வீட்டில் ஆள் நடமாட்டங்கள் இல்லாமையினால் அவ் வீட்டில் இனம் தெரியாத நபர்களினால் பழைய 30 ஏகே ரவைகள் மற்றும் 3 ஏகே 47 துவக்குக்குரிய மகஸின்கள் என்பன வைக்கப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

(52)

# சாவகச்சேரியில் சிறுமியுடன் சுற்றிய நபர் கைது

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 15வயதான சிறுமியை மோட்டார் சைக்கிளில் அழைத்துக் கொண்டு சாவகச்சேரிப் பகுதியில் சுற்றிய 30வயது இளைஞன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய போதே சாவகச்சேரி பொலிஸார் இருவரையும் கைது செய்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.குறித்த சிறுமி கடந்த 5ஆம் திகதி முதல் அவரது வீட்டில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் இவ்வாறு சாவகச்சேரி பொலிஸார் நுணாவில் பகுதியில் வைத்து சிறுமியை மீட்டுள்ளனர். (13)

## அரசியல்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

படையெடுப்பு பற்றிய 2016 பிரிட்டிஷ் சில்கொட் விசாரணை இது தேவையற்றது என்றும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய இரண்டும் ஐ.நா. பாதுகாப்புச் சபையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும் கூறியது. வாஷிங்டனில், 9/11 பயங்கரவாதத் தாக்குதலை விசாரணை செய்த குழு , ஈராக் அல்—கொய்தாவுக்கு உதவுவதாகவும் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் அமெரிக்கா கூறுவது 'உளவுத்துறையால் நிராகரிக்கப்பட்ட மேலோட்டமான தகவல்களின் அடிப்படையிலானது' என்று கூறியிருந்தது . படையெடுப்பின் முதல் மூன்று ஆண்டுகளில் 150,000 ஈராக்கிய பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

ஜனநாயகம் மற்றும் சமாதானத்துக்கு அமெரிக்கா பங்களிப்பு செய்வதைப் பற்றி எதுவும் பதிவு செய்யப்படாத நிலையில், பூகோள —அரசியல் ரீதியாக தங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் நம்பும் நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் மீதான வெளிப்படையான மற்றும் இரகசிய தலையீடுகளுக்கான குற்றச்சாட்டுகளின் சரத்தை அது கொண்டுள்ளது. அமெரிக்காவின் இரகசிய 'ஆட்சி மாற்றங்கள்" பற்றி பேசுகையில், 'அமெரிக்காவின் பரந்த ஆட்சிக் கலை இன்னும் சிக்கலாக உள்ளது. ஆட்சி மாற்றத்தை நாடுவது ஜனநாயகத்தை மேம்படுத்துதல், மனிதாபிமான உதவி மற்றும் சிவில்—சமூக ஆதரவு திட்டங்கள் வெறும் மண் குதிரைகள் என்று தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்தது (ஆட்சி மாற்ற வர்த்தகத்திலிருந்து விலகி இருங்கள் — பெஞ்சமின் டெனிசன் / வார் ஒன் தி ரொக்ஸ் — 2020 ஜூன் 16). ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு அமெரிக்கா மீண்டும் வருவதைப் பற்றி பெருமைப்பட ஏதாவது இருக்கிறதா?

2015 ஜனவரி ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, 2015 அக்டோபரில் இணை அனுசரணையுடன் கூடிய ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 30/1 இல் அமெரிக்காவிற்கும் புதிய 'நல்லாட்சி' அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு பெரிய சமரசத்தை நாங்கள் கண்டோம். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமெரிக்காவுடன் இணைந்து இணை அனுசரணை வழங்குவது தமிழரசுக் கட்சியின் இணக்கத்துடன் புதிய அரசாங்கத்தால் ஒரு சாதனையாகக் கணிக்கப்பட்டது. ஆயினும்கூட சுய விருப்பமின்றி காணாமல் போனவர்களுக்கு நீதிவழங்கக் கோரி போராட்டம் நடத்திய, எதிர்ப்புத் தெரிவித்த தாய்மார்கள் மற்றும் மனைவிமார்களுக்கு அவை எதுவுமில்லையென்றே அர்த்தப்படுகிறது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் வட.கிழக்கு தமிழ் மக்களால் 'காணாமலாக்கப்பட்டவர்களை சுயவிருப்பமின்றி காணாமல் போனவர்கள்' என்று உரைபெயர்க்கப்பட்டிருப்பதாக வட.கிழக்கு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டது. ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் காணாமல்போனோர் அலுவலகம் இப்போது என்ன மாதிரி ? ராஜபக்ஷக்களுக்கு இது ஜெனீவாவில் நல்லதொரு சட்டபூர்வமான கவசமாகும் . விசாரணைகள் இன்றி காணாமல் போதலை கொடுத்து தீர்ப்பதற்கு பாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பால் வாக்களிக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தால் நிறுவப்பட்ட காணாமல்போனோர் அலுவலகத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

வடக்கு—கிழக்கிலுள்ள மக்களுக்கு ப்பதிலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு /தமிழரசுக் கட்சித் தலைமைத்துவம் சந்தேகத்திற்குரிய அமெரிக்காவிற்கும், செயற்பாட்டுத்திறனற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் மாறுவது அவர்கள் தங்கள் சொந்த மக்களை விட 'வெளியாட்கள்' மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதை நிரூபிக்கிறது. ஒன்றுபட்ட முயற்சியால் மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது இப்போது இளம் அரசியல்வாதி இராசமாணிக்கம் சாணக்கியனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் பெப்ரவரி தொடக்கத்தில் 'பி 2பி 'யில் கிழக்கிலிருந்து வடக்கிற்கு ஐந்து நாட்களும் பேரணியில் பங்கேற்றிருந்தார்.

முதன்முறையாக ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்களை அழைத்துச் சென்ற வரலாற்றுப் பயணத்தின் போது, 'இந்து' விடம் பிரதான ஏற்பாட்டாளர்களில் ஒருவரான எஸ்.சி.சி.இளங்கோவன் விவேகத்துடன் பேசியிருந்தார். 'சகல தரப்பையும் உள்ளடக்கிய அரசியலின்' அவசியத்தைக் காணும் இளைஞர்களை சந்திப்பது உறுதியளிக்கிறது என்று 'தி இந்து' விடம் அவர் கூறியுள்ளார் . 'உண்மையில், அவர்கள் சிறுபான்மையினருடன் மட்டுமல்லாமல் முற்போக்கான சிங்கள மக்களுடனும் அடக்குமுறை, பிளவுபடுத்தும் சித்தாந்தங்களை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான மற்றும் அர்த்தமுள்ள கூட்டணியை உருவாக்கக்கூடிய, உள்ளடக்கிய இடத்தில் பெறுமானத்தை காண்கிறார்கள்' என்று அவர் கூறியிருந்தார். அதற்கு கடின உழைப்பும் நேரமும் தேவை என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஜனநாயகம் மற்றும் சமாதானத்திற்காக பாசாங்குத்தனங்களில் சார்ந்திருக்காமல் இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு/தமிழரசுக் கட்சி தலைமை எடுக்க வேண்டிய அரசியல்.

டெய்லி மிரர்

-பிரியந்த குடும்பத்துக்கு-

# பாகிஸ்தான் அரசால் இழப்பீடு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்

கொடூரமாக தாக்கி கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவரின் சம்பளத்தை மாதாந்தம் வழங்கவும் பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, பிரியந்த குமார மீது தாக்குதல் மேற்கொண்ட போது, அவரின் உயிரைக் காக்க முயன்ற மலிக் அத்னானுக்கு, பாகிஸ்தான் பிரதமரால் துணிச்சலுக்கான விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் சியால்கோட்டில் கொடூரமான முறையில் தாக்கி கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு 2.5 மில்லியன் ரூபா பணத்தை வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேல் இலங்கை பொருளாதாரத்திற்கு பிரியந்த குமார வழங்கிய ஒத்துழைப்பை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சியால்கோட்டிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராக கடமையாற்றிய பிரியந்த குமார , கடந்த 3 ஆம் திகதி கொடூரமான முறையில் தாக்கி எரியூட்டி கொலை செய்யப்பட்டார். அன்னாரின் அஸ்தி பாகிஸ்தானிலிருந்து கொண்டுவரப்பட்டு, கனேமுல்லையிலுள்ள அவருடைய வீட்டிற்கு நேற்று அதிகாலை கொண்டு செல்லப்பட்டது.

இந்த கொலை தொடர்பில் இதுவரை நூற்றுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

-கொலையுடன் தொடர்புடைய-

# சந்தேக நபர்கள் அனைவரும் கைது



பிரியந்த குமார தியவதனவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் சௌத்ரி பவாட் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையை பாகிஸ்தானிலுள்ள அனைவரும் கண்டித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மொஹான் விஜேவிக்ரமவுடனான சந்திப்பின் போதே அமைச்சர் ஃபவாட் ஹுசைன் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் தாம் மிகுந்த வருத்தம் அடைவதாக அவர் கூறினார்.

பிரியந்த குமார தியவதன படுகொலை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் விளக்கமளித்தார்.

இந்தத் துயரச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடைவதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

-றம்புட்டான் பழத் தோற்றம்-

# ஒமிக்ரான் திரிபின் 32 பிறழ்வுகள் இனம்காணல்

க.பிரசன்னா

ஒமிக்ரான் கொவிட் திரிபின் 32 பிறழ்வுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவை டெல்டா மற்றும் அல்பா திரிபுகளிலுள்ள பிறழ்வுகளை விடவும் அதிகமாகுமென கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் தொடர்பான நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் திரிபின் 23 பிறழ்வுகளும் அல்பா வைரஸ் திரிபின் 8 பிறழ்வுகளும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் றம்புட்டான் பழத்தின் தோற்றத்தினையுடைய ஒமிக்ரான் கொவிட் திரிபின் 32 பிறழ்வுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை டெல்டாவினை விட பரவும் அபாயம் மிக்கதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சமூகத்தில் பரவும் ஒமிக்ரான் தொற்று மற்றும் தனிநபர்கள் மீதான அதன் விளைவுகள் குறித்து உறுதியான அறிக்கையை வெளியிட போதுமான தரவு இல்லை. தொற்றின் பாதிப்பு தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைக்கும் போதே உண்மையான தகவல்களை வெளியிட முடியும். எனினும் ஒமிக்ரான் தொற்றுடன் தொடர்புடைய மரணங்கள் இதுவரை பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் தொடர்ச்சியாக 700 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாட்டில் கடந்த நவம்பர் 9 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 700 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை நவம்பர் 6 ஆம் திகதி முதல் 15 30 வரையான கொவிட் மரணங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

# இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணைய வழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 09 நிகழ்வின் 56 ஆவது கதையாடல் நிகழ்வு இன்று இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய கல்வி நிறுவகம் அழகியற்துறை விரிவுரையாளர் கலாநிதி றாகினி திருக்குமரன் அரிதார அரம்பையர் (தேவரடியார் பற்றிய சமூகப்பார்வை) என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார் . நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 64 7334 8261க டவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கந்தானை உபரயில் நிலையம் மூடப்பட்டது

கந்தானை உப ரயில் நிலையத்தை தற்காலிகமாக மூடுவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறித்த ரயில் நிலையத்தின் துணை ரயில் நிலைய பொறுப்பதிகாரி ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரயில் நிலையத்தை கிருமி நீக்கம் செய்து மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஒன்றிணைந்த தொழிற்சங்க போராட்டத்திற்க வடமாகாணம் ஆதரவு

நாடுமுழுவதுமுள்ள அரச தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த பல்வேறு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இன்று மேற்கொள்ளவிருக்கும் ஒருநாள் வேலைநிறுத்த போராட்டத்திற்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியேகத்தர்கள் சங்கமும் ஆதரவினை வழங்கியுள்ளதாக சங்கத்தின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்திற்கு வடமாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகிய நாமும் ஒத்துழைப்பை நல்கி போராட்டத்தினை வெற்றிபெற செய்வோம் என்று வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சங்கத்தின் தலைவர் க.விக்னேஸ்வரானந்தன் ஒப்பமிட்ட அறிக்கை ஒன்று நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. (15)

விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 222 3735, 021 7388 307 021 222 4077
advtyarlthinakkural@gmail.com
Paper ➡ thinakkural.lk/yarl-thinakkural
No: 267, Navalar Road, Jaffna.

## பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி
## 2022 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறி வித்தல் தொடர்பாக 07.12.2021 ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் செய்யப்பட்டுள்ள திருத்தம்

கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி 20.12.2021 மு.ப 10.00 மணி வரை என குறிப்பிடப்பட்டதனை 20.12.2021 பி.ப 3.00 மணி வரை எனவும் கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி 20.12.2021 மு.ப 10.30 மணி என குறிப்பிடப்பட்டதனை 21.12.2021 மு.ப 10.30 மணி எனவும் திருத்தி வாசிக்கவும்

அ.சா.அரியகுமார்,
தவிசாளர், பருத்தித்துறை பிரதேசசபை.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

பிறப்பு 24 * 08 * 1943



இறப்பு 08 * 11 * 2021

அமரர்
## சிவபதியம்மா சிவபாதம்

கடந்த (08.11.2021) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சிவபதியம்மா சிவபாதம் அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (06.12.2021) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கேணியில் நடைபெற்றன. தொடர்ந்து இன்று (08.12.2021) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவபதி"
நெல்லியடி வடக்கு,
வதிரி.

குடும்பத்தினர்
021 226 2138

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை-சுழிபுரம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2022

2022 ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருள்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருள்கள் விவரம் |
|---|---|
| A – 01 | காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் உபகரணங்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A – 03 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 04 | மின்சாரப் பொருள்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |
| A – 05 | கணனி, இலத்திரனியல் பொருள்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 06 | திரைச்சீலைகள் மற்றும் துணிவகைகள் |
| A – 07 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மற்றும் அதுசார்பான பொருள்கள் |
| A – 08 | சுத்திகரிப்பு உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் மற்றும் தொற்று நீக்கிகள் |
| A – 09 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள் |
| A – 10 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள் |
| A – 11 | கட்டிட இரும்புப் பொருள்கள், வாணிஸ், பெயின்ட், மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 12 | கற்கள், மண் வகைகள் |
| A – 13 | தீராந்திகள், பலகைகள் |
| A – 14 | நீர் விநியோகப் பொருள்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |

| தொகுதி B | சேவைகள் விவரம் |
|---|---|
| B – 01 | கணனி, நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B – 02 | மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தமும் மீளமுறுக்குதலும் |
| B – 03 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B – 04 | அலுவலக தளபாடங்கள் , உபகரணங்கள் திருத்தமும் பராமரிப்பும் |
| B – 05 | அச்சிடுதலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B – 06 | பாதுகாப்பு சேவையும், சுத்திகரிப்பு சேவையும் |
| B – 07 | வாகனங்களுக்குரிய ரியுப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| B – 08 | வாகன திருத்தம் |
| B – 09 | வாகன சுத்திகரிப்பு |
| B – 10 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B – 11 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B – 12 | கோலவுடை, சீருடை தைத்தல் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் (CIDA) பதிவு உள்ளவர்கள் மட்டும் |
|---|---|
| C – 01 | கட்டிட நிர்மாணமும் திருத்தமும் |
| C – 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C – 03 | கிணறு அமைத்தல் |
| C – 04 | வீதியில் உள்ள சிறிய பாலங்களை நிர்மாணமும் திருத்தமும் |

நிபந்தனைகள்

1. பதிவுகள் 2022 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்வோர் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக ரூபா 500/= பதிவுக்கட்டணமாகவும் ஒப்பந்த வேலைகளுக்கு பதிவு செய்துகொள்வோர் ரூபா 1000/= பதிவுக்கட்டணமாகவும் செலுத்தி தலைமையலுவலகத்தில் 28.12.2021 ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
4. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்பட்டு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.
5. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
6. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
7. விண்ணப்பப்படிவங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைகளுக்கான விண்ணப்பம் - 2022 எனக் குறிப்பிட்டு"தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்"என்னும் முகவரிக்கு 28.12.2021 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

த.நடனேந்திரன்,
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

# காலி கிளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்தியது கொழும்பு ஸ்டார்ஸ்

## -லங்கா பிரீமியர் லீக் டி-20 கிரிக்கெட்-



லங்கா பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் காலி கிளாடியேட்டர்ஸ்க்கு எதிரான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 4 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் வெற்றிக்கு தனஞ்சய டி சில்வாவின் சகலதுறை ஆட்டம் உறுதுணையாக இருந்தது.

பந்து வீச்சில் தனஞ்சய டி சில்வா நான்கு ஓவர்களுக்கு பந்துப் பரிமாற்றம் மேற்கொண்டு 18 ஓட்டங்களை மாத்திரம் வழங்கினார். அதே நேரம் காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் அதிரடி வீரர்களான தனுஷ்க குணதிலக மற்றும் பானுக ராஜபக்ஷ ஆகியோரின் விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றினார்.

கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமான இப் போட்டியில் காலி அணி நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

எனினும் ஆரம்பம் முதலே கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஆக்ரோஷமான பந்துப் பரிமாற்றங்களுக்கு தாக்குபிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

முதல் ஆறு ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அணி சார்பில் பென் டங்க் 38 ஓட்டங்களையும், இசுரு உதான 25 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களை பெற்றது காலி கிளாடியேட்டர்ஸ்.

117 என்ற இலகுவான வெற்றியிலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் ஆறு விக்கெட்டுகளை காலி கிளாடியேட்டர்ஸ் அணியை 4 விக்கெட்டுக்காளால் வென்றது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணி சார்பில் சந்திமால் 26 ஓட்டங்களையும், தனஞ்சய டிசில்வா 24 ஓட்டங்களையும், டேவிட் வைஸ் 22 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

# முல்லைத்தீவு ஆண்கள் அணி தைக்கொண்டோவில் சம்பியன்



தைக்கொண்டோ போட்டியில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய ஆண்கள் தைக்கொண்டோ போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி 5 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தையும், யாழ் மாவட்ட அணி 2 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 6 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 11 பதக்கங்களைப் பெற்று 2 ஆம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணி ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் உட்பட 3 பதக்கங்களைப் பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றனர். (21)




# லங்கா பிரீமியர் லீக் தொடர் பினுர பெர்னாண்டோ நீக்கம்



கண்டி வோரியர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் பினுர பெர்னாண்டோ 2021 லங்கா பிரீமியர் லீக் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவர் காயத்தில் இருந்து முழுமையாக குணமடையாததால், அணியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக மற்றொரு வீரரை அணி அறிவித்துள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ரி-20 உலகக் கிண்ண போட்டியின் போது பினுர பெர்னாண்டோ காயம் அடைந்தார்.

அவர் இன்னும் முழுமையாக குணமடையாததன் காரணமாக லங்கா பிரீமியர் லீக் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அஷ்வினுக்கு வாய்ப்பு மறுத்ததேன்

நியூசிலாந்து தொடரில் அபாரமாக பந்துவீசிய அஷ்வினுக்கு இங்கிலாந்து தொடரில் வாய்ப்பு கொடுக்காதது குறித்து கப்டன் விராட் கோலி, அப்போதைய பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் பதிலளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் கப்டன் சல்மான் பட் வலியுறுத்தி உள்ளார்.

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீரர்களில் ஒருவர் ஆர்.அஷ்வின். தமிழகத்தை சேர்ந்த 35 வயதான அவர் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்து வீசினார். அவர் 14 விக்கெட்டை கைப்பற்றி தொடர் நாயகன் விருதை பெற்றார்.அஸ்வின் 81 டெஸ்டில் விளையாடி 427 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். சொந்த மண்ணில் சிறப்பாக பந்து வீசிய அவருக்கு இங்கிலாந்து பயணத்தின்போது ஒரு டெஸ்டில் கூட விளையாட வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

அஷ்வின் போன்ற மேட்ச் வின்னரை இங்கிலாந்து தொடரில் விளையாட வாய்ப்பு கொடுக்காததை இன்னும் நம்ப முடியவில்லை. அவர் ஒரு சிறந்த சுழற்பந்து வீரர். அவருக்கு விளையாட வாய்ப்பு கொடுக்காதது ஏன்? என்பது பற்றி அப்போதைய பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, விராட் கோலி ஆகியோர் மட்டுமே பதில் அளிக்க முடியும். அவர்கள் இதுகுறித்து பதில் அளிக்க வேண்டும் என்று சல்மான் பட் கூறியுள்ளார்.

# சர்வதேச அளவிலான கிரிக்கெட் 50 வெற்றிகள்: கோலி சாதனை

சர்வதேச அளவிலான கிரிக்கெட்டில் 50 வெற்றிகள் பெற்றதற்கு பி.சி.சி.ஐ. விராட் கோலிக்கு டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த நியூசிலாந்து அணி ரி-20, டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. முதலில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரை 3-0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

இந்தியா, நியூசிலாந்து இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடந்தது. இதில் 372 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்று 1-0 எனும் கணக்கில் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. இந்நிலையில், சர்வதேச அளவிலான கிரிக்கெட்டின் ஒவ்வொரு பிரிவிலும் விராட் கோலி 50 வெற்றிகளைப் பெற்ற முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

செங்கடகல பினான்ஸ்

நடைமுறையிலுள்ள சிரேஷ்ட வைப்பு விகிதங்கள் (60 வயதிற்கு மேல்)

| காலம் | மாதாந்தம் | A.E.R. | முதிர்வின் போது | A.E.R. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 7% | 7.23% |
| 3 மாதங்கள் | | | 7.75% | 7.98% |
| 6 மாதங்கள் | | | 7.75% | 7.9% |
| 1 வருடம் | 9.25% | 9.65% | 9.5% | 9.5% |
| 15 மாதங்கள் | 9.25% | 9.65% | 9.5% | 9.39% |
| 18 மாதங்கள் | 9.25% | 9.65% | 9.75% | 9.53% |
| 2 வருடங்கள் | 9.5% | 9.92% | 10.5% | 10% |
| 3 வருடங்கள் | 10.25% | 10.75% | 11% | 9.97% |
| 4 வருடங்கள் | 10.25% | 10.75% | 11% | 9.54% |
| 5 வருடங்கள் | 10.5% | 11.02% | 11.5% | 9.51% |

வருடங்களுக்கு மேலான இணைப்பு

செங்கடகல பினான்ஸ்
உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி வீதத்தையும் VISA டெபிட் கார்ட்டினையும் வழங்குகின்றது.
சேமிப்புகளுக்கு 4.5% வரை வருட வட்டி



நடைமுறையிலுள்ள பொதுவான வைப்பு விகிதங்கள்

| காலம் | மாதாந்தம் | A.E.R. | முதிர்வின் போது | A.E.R. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 7% | 7.23% |
| 3 மாதங்கள் | | | 7.75% | 7.98% |
| 6 மாதங்கள் | | | 7.75% | 7.9% |
| 1 வருடம் | 8.75% | 9.11% | 9% | 9% |
| 15 மாதங்கள் | 8.75% | 9.11% | 9% | 8.9% |
| 18 மாதங்கள் | 8.75% | 9.11% | 9.25% | 9.05% |
| 2 வருடங்கள் | 9% | 9.38% | 10% | 9.54% |
| 3 வருடங்கள் | 9.75% | 10.2% | 10.5% | 9.56% |
| 4 வருடங்கள் | 9.75% | 10.2% | 10.5% | 9.16% |
| 5 வருடங்கள் | 10% | 10.47% | 11% | 9.16% |

விபரங்களை அறிய: - 077 3 090 370 ஹர்ஷனி - 077 4 789 212 நிரோஷன் - 076 3 770 932

வைப்பாளர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.1,100,000 என்ற நட்ட ஈட்டினைவிற்கு, இலங்கை வைப்புக் காப்புறுதித்திட்டத்தினால் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும்.

FITCH RATINGS SL BBB+(lka)

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 29.12.1968. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 375 780 மின்னஞ்சல்: info@senfin.com Web: www.senfin.com

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாணவர் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாணவர்களிற்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.எஸ்.நிக்கொலஸ்பிள்ளை மற்றும் யாழ் மாவட்டத்தின் சமுர்த்திப்பணிப்பாளர் வு.விஸ்வரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சமூக பாதுகாப்பு சபையின் சிரேஷ்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் பங்கேற்றார்.

நிகழ்வு யாழ் மாவட்டத்தின் சமூக பாதுகாப்பு சபையின் இணைப்பதிகாரி தே.பரணன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாணவர்களிற்கான பாதுகாப்பு திட்டத்தில் இணைக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 120 மாணவர்கள் 5000 ரூபா முதல் 50000 ரூபா வரையான புலமைப்பரிசிலிற்கான காசோலைகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாணவப்பருவத்திலேயே முதுமைப்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் இப் பாதுகாப்புத்திட்டத்தில் தமது பிள்ளைகளை இணைத்துக் கொள்ளும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தமது முதிர்வுக் காலத்தில் அரசதுறை வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளாத போதும் மாதாந்த ஓய்வூதியம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பினை இப்பாதுகாப்புத்திட்டம் வழங்குவதுடன், மாணவர்களிற்கு தரம் 5 புலமைப்பரிசில் சித்தி, க.பொ.த. சாதாரணதர சித்தி (சிறப்பு), க.பொ.த உயர்தர (பல்கலைக் கழக அனுமதி) என்பவற்றிற்கு பெறுமதி வாய்ந்த புலமைப்பரிசில்களை வழங்கி மாணவர்களிற்காக கல்வி ஊக்குவிப்பினை வழங்கும் திட்டமாகவும் சமூக பாதுகாப்பு சபையின் மாணவர்களிற்கான பாதுகாப்புத் திட்டம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் அமுல்படுத்தலில் யாழ் மாவட்டம் முன்னிலை வகித்து செயற்படுவதுடன் ஏனைய மாவட்டங்களிற்கும் முன் உதாரணமாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# கிராமப்புற மக்களை முன்னேற்ற புத்தாக்கத் தொழிற் பேருந்து

யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புற மாணவர்களின் கல்வி மற்றும் தொழிற் கல்வியை மேம்படுத்தும் வகையில் அமெரிக்க அரசாங்கத்தின் பங்களிப்புடன் நடமாடும் புத்தக தொழிற் பேருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவுடன் செம்மையாக்கப்பட்ட விரிஏ வின் தொழில் பேருந்து ஆனது உலகத் தரம் வாய்ந்த தொழில்முறை, தொழில் சோதனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக இலங்கையின் தென் முனையில் உள்ள தெய்வேந்திர முனைமுதல் வடக்கில் பருத்தித்துறை வரை ஆறு மாவட்டங்களில் உள்ள 21 பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 2,600 இளைஞர் யுவதிகளிடம் சென்றடைந்தது.

'இலங்கையின் கிராமப்புற இளைஞர்கள் உலகில் எங்கும் பெறக்கூடிய சிறந்த கற்றல் அனுபவத்தைப் பெறுவதைப்




பார்ப்பதே குறித்த செயற்திட்டத்தின் நேக்கமாகும். (75)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

மேற்படி 2022 ஆண்டிற்கான வழங்குநர் பதிவானது வழங்குநர் பதிவினை மேலும் ஊக்குவிக்கும் முகமாக 15.12.2021 வரை கால நீடிப்புச் செய்யப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

06.12.2021

முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# Invitation for Bids (IFB)

## DISTRICT SECRETARIAT - MANNAR

**Calling Quotations for Cleaning Service& Security Service for District Secretariat and 5 Divisional Secretariats, Mannar District–2022**
**MN/GA/ADM/TENDER/GEN (2022)**

01. The Chair person,Procurement Committee on behalf of the District Secretariat – Mannar now invites sealed bids from eligible and qualified bidders for Cleaning Service& Security Service for District Secretariat and five (5)Divisional Secretariats.
02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements,

**For Cleaning service**

a. Bidders shall have valid business registration
b. The firm shall have its registered head office or branch in Northern Province.

**For Security service**

a. Bidders shall have valid business registration
b. Approval of the Ministry of Defense to provide security service
c. The firm shall have its registered head office or branch in Northern Province.

04. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria given in Section2 –Bidding Data.
05. Interested bidders may obtain further information from District Secretariat, Mannar and inspect the bidding documents at District Secretariat from 9.00hrs to 15.00hrs on working days from 08/12/2021 to 28/12/2021.
06. A Complete set of each Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **"District Secretary, District Secretariat, Mannar"** from 08th December 2021 to 28th December 2021 from 09.00hrs to 15.00hrs upon.
07. Bids shall be delivered to District Secretariat, Mannar on or before 15.00 hrs of 29th December 2021. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

| Ser.No | Bid Details | Non Refundable Amount | Bid Security Amount | Bid Validity Period |
|---|---|---|---|---|
| 1. | Security Service - 2022 | 1,975.00 | 52,000.00 | Up to 15.03.2022 (77 days) |
| 2. | Cleaning Service - 2022 | 2,625.00 | 72,000.00 | Up to 15.03.2022 (77 days) |

08. For further details, please contacts, Procurement Division Tel No-0232222214,0232222213

**A. Stanley De Mel**
Chair person, District Procurement Committee,
District Secretariat ,Mannar
TP.No : 023 – 2222214,0232222213

Date: 06.12.2021

# பொது அறிவித்தல் - 2022
# வலிகாமம் மேற்கு பிரதேச சபை , சுழிபுரம்

**வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்**

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின்141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களிலும் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3. குறித்தகாலாண்டிற்குள் அக்காலப் பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதன பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | படவரைஞர்களைப் பதிவு செய்தல் | 2022ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவிடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2022 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2022ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2022ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கரவண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2022ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2022ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு வீதிகளில் வண்டில்கள் இன்றி போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் மாடுகளையும், கட்டாக்காலி மாடுகளையும் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்தோ அல்லது எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறிகள், இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல்சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன சேவை | என்ஜின் றோலர் (Engine Roller) மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2022 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2022ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

த.நடனேந்திரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

# கல்முனை மற்றும் பாண்டிருப்பு பகுதி குடியிருப்புக்களுக்குள் கடல் நீர் புகுந்தது



கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் நேற்று அதிகாலை திடீரென ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்புப் பகுதிக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியது.

இதனால் கல்முனை மாமாங்க விநாயகர் கோவில் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு கோவில் பகுதிகளும் பல வீடு, வளவுகளும் வெள்ளத்தில் மூழ்கி, பாதிப்புகள் ஏற்பட்டன. கடல் நீர் புகுந்தமையால், பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில், அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் அண்மைக் காலமாக கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி, கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நானு ஓயாவில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு




நானுஓயா - கிலோறண்டன் மேற்பிரிவில் நேற்று காலை எரிவாயு அடுப்பு வெடித்து ள்ளதாக பொலிஸார் கூறியிருக்கின்றனர்.

நேற்று காலை உணவு தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை செயற்படுத்திய போது குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இவ் வெடிப்புச் சம்பவத்தில் உயிராபத்துகளோ காயங்களோ ஏற்படவில்லை என்பதுடன் சமையலறையும் சமையல் பாத்திரங்களுமே பாதிக்கப்பட்டன. குறித்த வெடிப்பு சம்ப வம் தொடர்பாக நானுஓயா பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் மீது தாக்குதல்

சாவகச்சேரி நகரசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மீது நேற்று செவ்வாய்க்கிழமை காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி தபால் நிலைய வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற நகரசபை உறுப்பினர் தபால் நிலையத்திற்குள் மோட்டார் சைக்கிளை திருப்பிய வேளையில் அவருக்கு பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டினை இழந்து வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த குறித்த இளைஞன் நகரசபை உறுப்பினர் மீது நடு வீதியில் வைத்து தாக்குதல் நடத்தியதுடன்;அவரிடம் இருந்து இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் பறித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் என்ற முகவரியில் வசித்து வரும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினரான 72வயதான க.வேலாயுதபிள்ளை என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார். தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(13)

## இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நியமிக்கப்பட்டார்



இலங்கை இராணுவத்தின் 59 வது தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று முதல் உடன் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகி யோரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ இவரை நியமித்துள்ளார். மேஜர் ஜெனரல் லியனகே கஜபா படைப்பிரிவைச் சேர்ந்தவர் மற்றும் புதிய நியமனத்துக்கு முன்னர், இராணுவ தொண்டர் படையின் கட்டளைத் தளபதியாக பணியாற்றியவர். சேவையில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவுக்குப் பிறகு இவர் பதவியேற்றுள்ளார்.

## பொது சுகாதார பரிசோதகர்கள் விடுத்திருக்கின்ற எச்சரிக்கை



பண்டிகை காலத்தில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிக்காத பட்சத்தில் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கின்றனர். நாளாந்தம் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையை விட அதிகளவான தொ ற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாக குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.சுகாதார சட்டத்தை மீறி பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகவும் அவ்வாறான இடங்களுக்குள் பிரவேசித்து சுகாதார சட்டத்தை மீறி செயற்ப டுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பொது போக்குவரத்தில் சுகாதார நடைமுறைகள் கடுமையான முறையில் மீறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருகோணமலை - கப்பல்துறை பகுதியில் பேருந்து விபத்தில் சிக்கி 26 பேர் காயம்



திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் கப்பல்துறைப் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

தொழிற்சாலைப் பணியாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்தானது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதுண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்போது 26 பேர் காயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிவாயு விபத்தில் தீக்காயங்களுக்குள்ளான பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணம்



மாத்தளை - உடுப்பிஹில்ல பகுதியில் உள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப் பு வெடித்து எரிந்ததில் தீக்காயங்களுக்குள்ளான பெண் ஒருவர் நேற்று முன்தினம் 6 ம் திகதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாத்தளை உடுப்பிஹில்ல பகுதியைச் சேர்ந்த எச்.எம். சந்திரகுமாரி என்ற 69 வயது பெண்ணா வார். நவம்பர் 19 ஆம் திகதி எரிவாயு அடுப்பை பற்ற வைத்த போது உடலில் தீப்பிடித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பெண் மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்களாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையில் இரு நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியதாக அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். மருத்துவப் பரிசோதனைக்காக நேற்று மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இரத்தத்தில் சீனி அளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பெண் வைத்தியசாலையில் மரணித்தார்.

சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவரது குடும்பத்தினருக்கு நெருங்கிய ஒருவர் கூறுகையில், 'அதிகாலை 5.30 மணியளவில் தேநீர் தயாரித்த போது விபத்து ஏற்பட்டது. விபத்துக்குப் பிறகு தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், பின்னர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத் தப்பட்டார்' என்றார்.

# இலங்கை அடையாளத்துடன் பிறப்புச் சான்றிதழ் வழங்கல்





தேசிய பிறப்புச் சான்றிதழை வழங்கும் அதிகாரம் பிறப்பு மற்றும் இறப்பைப் பதிவு செய்யும் சட்டத்திற்கமைய பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய ஆட்கள் பெயர்ப்பட்டியலை பேணுதல் மற்றும் 15 வயதை அடைந்தவர்கள் மற்றும் அடையவுள்ள இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பத்திற்கமைய அவர்களைப் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையை வழங்குதல், ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோல், 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலங்கை அடையாள இலக்க) கட்டளையின் பிரகாரம் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் இலங்கை அடையாள இலக்கத்தை வழங்குவதற்காகவும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரே அடையாள இலக்கத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் போது குறித்த நடவடிக்கைகளை இலகுவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இலங்கையர்களுக்கு வருங்காலங்களில் வாய்ப்புக் கிடைக்கும். அதற்கமைய, ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணையவழியூடான இலங்கை அடையாள இலக்கத்தை பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு வெளியிடுவதற்கும், குறித்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகத் திணை க்களத்தின் மூலம் குறித்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### திருகோணமலை-தம்பலகாமம் பகுதியில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது



திருகோணமலை தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் நேற்றிரவு உறங்கும்போது திடீர் சத்தம் ஒன்று கேட்டுள்ளது. இந்நிலையில், அடுப்பங்கரைக்கு சென்று பார்த்த போது அங்கு எரிவாயு வெடித்ததில் அடுப்பும் உடைந்து சேதமாக்கப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

எரிவாயு கசிந்து இவ் வெடிப்பு இடம் பெற்றிருக்கலாம் என தெரியவருகிறது. உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் பொலிசார் நேற்று (07) காலை சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பிரியந்த குமாரவின் இறுதிக் கிரியை இன்று இடம்பெறும்



பாகிஸ்தானின் சியால்கோட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளது.

அவரது பூதவுடல் நேற்று (07) கனேமுல்லையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சியால்கோட்டில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் பொது முகாமையாளரான பிரியந்த குமார சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.அவரது பூதவுடல் நேற்றுமுன்தினம் (06) பிற்பகல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சந்தேக நபர்களை பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் ஏற்கனவே கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

## கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டி.எம்.எல்.பண்டாரநாயக்க தமது கடமைகளை நேற்று (7) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் சமயத்தலைவர்களின் ஆசீர் வாதத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர் இதற்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டி கோராள, திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் ஒமிக்ரோன் வைரஸினால் மூன்றாவது அலை ?

## - பிரபல விஞ்ஞானி எச்சரிக்கை-



ஒமிக்ரோன் வைரஸினால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள், 3 ஆவது அலை இந்தியாவில் ஏற்படுமென, கொரோனா கணிப்பு வியூக நிபுணரும், இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் விஞ்ஞானியுமான, மனிந்திரா அகர்வால் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் பரவல் தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, தற்போது உலகம் முழுவதிலும் பரவ ஆரம்பித்துள்ள ஒமிக்ரோன் வைரஸ் தாக்கமானது, எதிர்வரும் (2022) பெப்ரவரி மாதத்திற்குள், 3ஆவது அலை உச்சத்தை அடைந்துவிடும்.


இதனால், நாட்டில் தினமும் 1 இலட்சம் முதல் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படலாமெனவும்,ஆனால் இது, 2ஆவது அலையை விடவும், இந்த வைரஸ் பரவல் மிதமானதாகவே இருக்குமெனவும் கணித்துள்ளார். தற்போதைய புதிய மாறுபாடு, அதிகமாகப் பரவும் தன்மையைக் கொண்டது போல் தெரிந்தாலும், அதன் தீவிரம் டெல்டா வைரஸில் இருப்பது போல இல்லையெனவும், கூறியுள்ளார்.

இந்நிலையில், தென் ஆப்பிரிக்காவில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுப் பரவலை உன்னிப்பாக கவனித்து வருகின்றோம்.

தற்போது வரை, இந்த வைரஸ் தொற்றானது, தென் ஆப்பிரிக்காவிலுள்ள வைத்தியசாலைகளில், நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவில்லை.

ஆனால், அங்கு தொற்றுப் பரவல் மற்றும் வைத்தியசாலைகளில் நோயாளிகள் சேர்க்கை போன்ற தரவுகள், எமக்கு தெளிவான முடிவுகளைத் தருமெனவும், அவர் மேலும் கூறியுள்ளார்.

# நிபுணர்களின் மாறுபட்ட கருத்துக்களினால் இந்தியாவில் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் தாமதம்



இந்தியாவில், ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் 23 பேருக்கு பாதித்துள்ள நிலையில், கொரோனாத் தொற்று வைரஸைக் கட்டுப்படுத்த, பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது குறித்து, மத்திய அரசாங்கமே, முடிவெடுக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது.

இதையடுத்து டெல்லியில் நிபுணர்கள் குழு சார்பில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது குறித்து ஆராயப்பட்டது. 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பாகவும், இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது நிபுணர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட்டன. பூஸ்டர் தடுப்பூசி தேவையில்லையெனப் பலரும் கருத்து தெரிவித்தனர்.

கோவிட் பரவல் சூழ்நிலைக்கேற்ப, அடுத்த கட்ட முடிவையெடுக்கலாமென, சில நிபுணர்கள் தெரிவித்தனர். சில நிபுணர்கள் மட்டுமே, 3-வது கட்டத் தடுப்பூசியை மத்திய சுகாதாரத் துறை உடனடியாகத் தொடங்க வேண்டுமென வலியுறுத்தினர்.

நிபுணர்களின் மாறுபட்ட கருத்துக்கள் காரணமாக, நேற்றைய கூட்டத்தில், எந்த இறுதி முடிவும் எடுக்க முடியவில்லை. எனவே, பூஸ்டர் தடுப்பூசி தொடர்பாக பின்னர் முடிவு செய்து கொள்ளலாமெனத் தீர்மானிக்கப்பட்டது-இந்த நிலையில், சிறுவர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பமாகுவதும், தாமதமாகியுள்ளது. பூஸ்டர் தடுப்பூசி குறித்து உலக சுகாதார நிறுவனம் எடுக்கும் முடிவுகளைத் தொடர்ந்து, இந்தியாவிலும் தடுப்பூசி தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்ய ஜனாதிபதி புடின்-பிரதமர் மோடி நேரில் சந்தித்துக் கலந்துரையாடல்



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். புதுடெல்லியிலுள்ள ஹைதராபாத் இல்லத்தில், குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இந்தியப் பிரதமர் மோடி, கொரோனா தொற்றுநோய்களின் போது கூட, இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் எந்த மாற்றமும் இல்லை.

மேலும், இரு தரப்பிற்கும் இடையிலான சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை வலுவடைந்து வருகின்றது. ஆப்கானிஸ்தானின் நிலைமை மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து, இரு தரப்பும் தொடர்பில் இருக்கின்றோம்.

அந்தவகையில், இரு நாடுகளும் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. நாங்கள் ஒத்துழைப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் உணர்திறனையும் மனதில் வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது, 'இந்தியாவை ஒரு பெரிய சக்தியாகவும், நட்பான தேசமாகவும் நாங்கள் பார்க்கிறோம். நமது நாடுகளுக்கிடையேயான உறவுகள், தொடர்ந்து வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் சரிவடைந்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை



இந்தியாவில் கொரோனா பாதிப்பு 6 நாட்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் 7 ஆயிரத்திற்கும் கீழ் சரிந்துள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில், நேற்றுக் காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில், புதிதாக 6,822 பேருக்கு கொரோனா தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொரோனாவினால் கேரளாவில் 3,277 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி நிலைவரப்படி, தினசரிப் பாதிப்பு 6,990 ஆக இருந்தது. அதன் பின்னர் கொரோனா பாதிப்பு சற்று உயர்ந்து வந்த நிலையில், மீண்டும் 7 ஆயிரத்திற்கும் குறைவான எண்ணிக்கையை எட்டியுள்ளது. இந்தியாவில் தினசரிப் பாதிப்பு இந்தளவில் குறைந்திருப்பது, கடந்த 558 நாட்களில், இதுவே முதல் முறையாகும். இந்த நிலையில், கொரோனா மொத்தப் பாதிப்பு 3 கோடியே 46 லட்சத்து 48 ஆயிரத்து 383 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பினால், கேரளாவில் 168 பேர் உட்பட நாடு முழுவதும், மேலும் 220 பேர் இறந்துள்ளனர். இதனால், ஒட்டுமொத்தப் பலி எண்ணிக்கை 4,73,757 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாப் பாதிப்பிலிருந்து, நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 10,004 பேர் குணமடைந்துள்ளனர்.

இதுவரை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 40 லட்சத்து 79 ஆயிரத்து 612 ஆக உயர்ந்துள்ளது. அத்துடன், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை, கடந்த 554 நாட்களில் இல்லாதளவில், 95,014 ஆகக் குறைந்துள்ளது.

# காதலனுடன் ஓடிச் சென்ற 19 வயதுப் பெண்; பயன்தராமல் போன பாசப் போராட்டம்

## - தவித்துப் போன பெற்றோர்-

தமிழகத்தில் காதலனுடன் ஓடிச்சென்ற 19 வயது இளம் பெண்ணிடம், அவர்களது பெற்றோர் தங்களுடன் வீட்டுக்கு வரும்படி, கெஞ்சிக் கதறி அழுத நிலையில், பிடிவாதமாக வரமறுக்கும் காட்சிகள், வெளியாகியுள்ளன.

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெங்கட்ராஜ் என்பவரது 19 வயது செல்ல மகள் தனலட்சுமி பள்ளிப்படிப்பை முடித்து, கல்லூரியில் அடியெடுத்து வைக்க வேண்டிய நிலையில், தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்குச் சென்ற தனலட்சுமியை 5ஆம் திகதி முதல் காணவில்லையெனவும், அவரை மீட்டுத் தருமாறு கோரியும், வெங்கட்ராஜ் கரூர் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில், இந்தப் பெண் தனது காதலனுடன் பெரியகுளத்திலுள்ள புதுக்கோட்டை எனும் கிராமத்தில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அவர்கள் இருவரையும் பெரியகுளம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற காவல்துறையினர், இந்தப் பெண்ணின் பெற்றோரை வரவழைத்தனர்.தங்கள் மகளைக் கையெடுத்துக் கும்பிட்டு, தங்களுடன் வருமாறு அழைத்தாலும், அவர்களுடன் செல்ல மறுத்து, தனலட்சுமி அடம்பிடித்தார்

மகள் மீது கொண்ட உரிமையில், கண்ணீரும் கம்பலையுமாக, அவளது கையைப்பிடித்த தன்னோடு வருமாறு அழைத்த தாயைத் தட்டி விட்டு, அவர்களுடன் செல்ல மறுத்தார்.19 வருடங்கள் கேட்டதை எல்லாம் வாங்கிக்கொடுத்து, பாசம் காட்டி, வளர்த்த தாயும் தந்தையும் கையேந்தி பிச்சை எடுப்பது போல மன்றாடியும், காலில் விழுவதாக கெஞ்சியும், கொஞ்சமும் இரக்கமில்லாமல் அடம் பிடித்துக் கொண்டு, அங்கேயே நின்றது அந்தப் பருவக்கோளாறுப் பெண்.

நீங்கள் தேவையில்லை. உங்கள் சொத்து,சுகம் எதுவும் எனக்குத் தேவையில்லை, அவன் மட்டும் போதும், அவனுடன் தான் வாழப் போகிறேன் என்று, பிடிவாதமாகக் கூறி பெற்றோருடன் செல்வதற்கு, இந்தப் பெண் மறுத்துவிட்டார்.

இறுதியாக தனலட்சுமி, தான் மேஜர் என்றும், தனது காதலனுடன் தான் செல்வதாக, பிடிவாதமாக இருந்தமையினால், பொலிஸார் வேறு வழியில்லாமல், அவரை அவரது காதலன் மாதேஸ்வரனுடன், கரூருக்கு அனுப்பி வைத்தனர். கரூரிலிருந்து எப்படியாவது மகளை அழைத்துக் கொண்டு சென்றுவிடலாம் என்று நம்பிக்கையுடன் வந்த பெற்றோர், தங்கள் நம்பிக்கையுடன் சேர்த்து, ஒரே மகளையும் தொலைத்துவிட்டு, பரிதாபமாக காவல் நிலையத்தை விட்டு வெளியேறும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்றைய இளையதலைமுறையினரின் மனதில் சினிமா ஏற்படுத்திய மோசமான தாக்கமே, இந்த இளம் பெண்ணின் செயற்பாடுகளின் மூலம் வெளிச்சத்திற்கு வந்திருப்பதாக பலரும் விமர்சித்து வருகின்றனர்.

# இறந்து போன தொழிலாளியின் கைப்பேசிக்கு வந்த கோவிட் தடுப்பூசி சான்றிதழ்

தமிழகத்தின் தென்காசி மாவட்டம் புளியங்குடியைச் சேர்ந்த, 62 வயதான கூலித் தொழிலாளியான மாரியப்பன், முதல் தவணை கோவிஷீல்ட் தடுப்பூசியை, கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி பெற்றுள்ளார்.

இந்நிலையில், உடல் நிலை சரியில்லாமலிருந்த மாரியப்பன் கடந்த அக்டோபர் மாதம் 8-ஆம் திகதி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல், இறந்து விட்டார். தொடர்ந்து அவரது மகன் மாரிசெல்வம் நகராட்சி அலுவலகத்தில் தனது தந்தையின் இறப்பைப் பதிவு செய்து, இறப்பு சான்றிதழும் பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில், நேற்று அவரது கைப்பேசிக்கு இறந்து போன அவரது தந்தை மாரியப்பன் 2-வது தவணை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டதாக, குறுந்தகவல் வந்துள்ளது. இதனைப்பார்த்து மாரிசெல்வம் மற்றும் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

கொரோனா தொற்றிலிருந்து தப்பிக்க அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டுமென, அரசாங்கம் அறிவித்து வரும் நிலையில், தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு குறுஞ்செய்தி அவர்களுடைய கைப்பேசிக்கு வருவது வழக்கமாகும். ஆனால், பெரும்பாலான இடங்களில் தடுப்பூசி செலுத்தி 2 மாதங்கள் கடந்தநிலையிலும், குறுந்தகவல் வருவதில்லையென, பொதுமக்கள் கூறி வந்தனர்.இந்நிலையில், இறந்து 2 மாதங்களுக்குப் பின்னர், தற்போது தடுப்பூசி செலுத்திக்கொண்டதாக குறுஞ்செய்தி வந்துள்ளது.

இதேபோல், தமிழகத்தின் பல பகுதிகளிலும் தடுப்பூசி வழங்கும் பணிகளில், குளறுபடிகள் இருந்து வரும் நிலையில், புளியங்குடியில் மட்டும் கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்தே, பல்வேறு குளறுபடிகள் நடந்து வருகின்றன.

அரசாங்கம் பல கோடி ரூபாவை செலவழித்து, தடுப்பூசிகளை மக்களுக்கு இலவசமாக கொடுத்து வருகின்றது. ஆனால், மறுபுறம் தடுப்பூசிகளை செலுத்தாமலேயே, தாம் அதனைப் பெற்றுவிட்டதாக, சுகாதாரத்துறை போலி கணக்குகளைக் காட்டி வருவதாக, சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-06
வெற்றி வாரம் : 3297
வர்ணம் : மஞ்சள்
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,000,000/-
வெற்றி இலக்கங்கள்
23 48 52 53
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 9,375,000/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1585
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2021.12.06
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
C 02 09 44 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,115,480/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2021.12.06
சீட்டிழுப்பு இல: 3746
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ.3,906,940/-
வெற்றி இலக்கங்கள்
01 37 65 73
ஆங்கில எழுத்து B
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## சிறுவிளம்பரங்கள்

### மணமகன் தேவை

1983. யாழ்ந்து பள்ளர். ரேவதி. Devopment Officer. கீரிமலை. பதிவு #6423. புதன்கிழமை. 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு. மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 6649 401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.


### வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஐஸ் கிறீம் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. 20 - 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு - 077 3788746

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1411
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.12.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 5,447,280/-
வெற்றி இலக்கங்கள்
28 52 55 74
ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி : 2021-12-06
வெற்றி வாரம் : 1791 | வர்ணம் : மஞ்சள்
சுப்பர் ஜக்பொட்
ரூ. 28,493,900/-
வெற்றி இலக்கங்கள்
26 52 53 59
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,385,540/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 28,619,560/-
அபிவிருத்தி லொத்தர் சபை

# பிரித்தானியாவில் வேகமாகப் பரவும் ஒமிக்ரோன்; ஒரே நாளில் 90 பேருக்குப் பாதிப்பு



உலக அளவில் மிரட்டிக் கொண்டிருக்கும் ஒமிக்ரோன் வைரஸ், பல்வேறு நாடுகளுக்கு அடுத்தடுத்து பரவி வருகின்றது. இதனால் தீவிர கட்டுப்பாடுகளை பல நாடுகளும் கையில் எடுத்து வருகின்றன. கொரோனா வைரஸ் பல்வேறு நிலைகளில் உருமாற்றமடைந்து வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது.

இப்போது ஒமிக்ரோன் என்ற புதிய வகை திரிபாக கொரோனா வைரஸ் மாறியுள்ளது. ஒமிக்ரோன் வைரஸ் இங்கிலாந்தின் பிராந்தியங்கள் முழுவதும் சமூகப் பரவலாக மாறியுள்ளது. தென் ஆபிரிக்காவைத் தொடர்ந்து அமெரிக்கா, நியூயோர்க், நியூசிலாந்து, சிங்கப்பூர், பிரித்தானியா உட்பட 40ற்கும் மேற்பட்ட நாடுகளில் ஓமைக்ரோன் வைரஸ் நுழைந்து விட்டது.இதனால், ஆபத்தான நாடுகளிலிருந்து பிற நாடுகளுக்குச் செல்லும் பயணிகள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

உருமாறிய புதிய வகை கொரோனாவான ஒமிக்ரோன் வைரஸ் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகின்றது. அந்த வைரஸ் பல்வேறு நாடுகளிலும் பரவியுள்ளது.இது ஏனைய வைரஸ்களுடன் ஒப்பிடும் போது, மிக வேகமாகப் பரவக்கூடுமெனவும், வீரியமிக்கது என்றும், உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த வைரஸ் இந்தியா உட்பட, உலகின் 45ற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி விட்டது. இதனால் உலக நாடுகள் பெரும் அச்சத்தில் உள்ளன.

இந்த வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு, தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், ஒமிக்ரோன் வைரஸ் தாய்லாந்திலும் பரவியுள்ளது. ஸ்பெயினிலிருந்து கடந்த மாதம் 29-ம் திகதி தாய்லாந்திற்கு வந்த 35 வயது நிரம்பிய அமெரிக்கருக்கு இந்த வைரஸ் தொற்று உறுதியானது.

அதேபோல, ஐரோப்பிய நாடான இத்தாலியிலும் ஒமிக்ரோன் அதிகமாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. எனவே, தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு அந்த நாட்டு அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்நிலையில், பிரிட்டனில் ஒமிக்ரோன் வைரஸினால், நேற்று முன்தினம் மேலும் 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் மொத்தப் பாதிப்பு எண்ணிக்கை 336-ஆக உயர்ந்துள்ளதாகவும் அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இங்கிலாந்தில் 64 பேரும், ஸ்கொட்லாந்தில் 23 பேரும், வேல்ஸில் 3 பேரும் ஒமிக்ரோன் வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் நிபுணரான பேராசிரியர் பால் ஹன்டர் கூறும்போது, பிரித்தானியாவில் சில வாரங்களுக்குள், டெல்டா வகை கொரோனா படிப்படியாக வெளியேறுமெனவும் ஒமிக்ரோன் வைரஸ், விரைவாக ஆதிக்கம் செலுத்துமெனவும், தெரிவித்துள்ளார்.

## சிரியாவின் முக்கிய துறைமுகம் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்



சிரியாவில் பெரும்பாலான பொருட்களின் இறக்குமதிகள் நடைபெறும் மிக முக்கியமான துறைமுகத்தில், இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.


சிரியாவில் கடுமையான உள்நாட்டு போர் இடம்பெறுகின்றது. அங்கு அரசுப் படைகளும், கிளர்ச்சியாளர்களும் சண்டையிட்டு வருகிறார்கள். இதில் ஏராளமான அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் சிரியா மீது இஸ்ரேல் நாடும் அடிக்கடி தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், சிரியாவில் உள்ள துறைமுகம் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாக சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது. அந்நாட்டின் கடற்கரை நகரமான லதாகியாவிலுள்ள துறைமுகம் மீது, நேற்று அதிகாலை இஸ்ரேலியப் போர் விமானங்கள் ஏவுகணைகளை வீசித் தாக்கியுள்ளன.

துறைமுகத்திலுள்ள கொள்கலன்கள் பகுதியில் பல ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில், அப்பகுதி முழுவதும் தீப்பிடித்து நாசமானதாக,சிரியாவின் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. மேலும், துறைமுகத்தில் பயங்கர வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், கொள்கலன்கள் பகுதியில் தீ கொளுந்து விட்டு எரிந்ததாகவும், அங்கு தீயணைப்பு வாகனங்கள் விரைந்து சென்றதாகவும், சிரியா அரசுத் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

லதாகியா துறைமுகத்தில் ஏவுகணைகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. அங்கு மீட்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராணுவம் தெரிவித்துள்ளது.சிரியாவில் பெரும்பாலான இறக்குமதிகள் லதாகியா துறைமுகத்திலேயே, நடந்து வருகின்றது. இந்த நிலையில், அந்நாட்டின் மிக முக்கியமான துறைமுகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடகொரிய அரசின் கோர முகம் 14 வயதுச் சிறுவனுக்கு கிடைத்த தண்டனை




வடகொரியாவில் தடை செய்யப்பட்ட சினிமாவை 5 நிமிடங்கள் பார்த்த குற்றத்திற்காக அந்நாட்டு அரசு 14 வயது சிறுவனுக்கு 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளும் வடகொரியாவுக்கு எதிரி நாடுகள் என்பதனால், அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்தும் வடகொரியாவில் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தென் கொரியாவில் வெளியான 'தி அங்கிள்' திரைப்படம் பிரபலமானது. இதையடுத்து வடகொரியாவிலுள்ள யாங்காங் மாகாணத்தில் 14 வயது சிறுவன் ஒருவர் வசித்து வருகிறார்.

இந்நிலையில், அந்தச் சிறுவன் ஹைசன் நகரத்தின் ஆரம்பப் பள்ளி வளாகத்தில் தடை செய்யப்பட்ட திரைப்படத்தை 5 நிமிடங்கள் பார்த்ததாகக் கூறப்படுகின்றது. இதைத்தொடர்ந்து, பள்ளிக்கூடத்தில் வைத்தே, பொலிஸார் அந்தச் சிறுவனை கைது செய்துள்ளனர்.

அந்த வகையில் குறித்த சிறுவன் செய்த குற்றத்திற்கு 14 வருட கடுங்காவல் தண்டனை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தென்கொரியத் திரைப்படங்கள், பதிவுகள், புத்தகங்கள், பாடல்கள், ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களை நேரடியாகப் பார்த்தாலோ அல்லது கேட்டாலோ 15 ஆண்டுகளுக்கு குறைவாக தண்டனை கிடைக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா வைரஸை அழிக்கும் சூயிங்கம் தயாரிப்பு பணிகளில் அமெரிக்க விஞ்ஞானிகள்



கொரோனா வைரஸ் உலகமெங்கும் தாண்டவமாடும் நிலையில், புதிய வகையான ஓமிக்ரோன் வைரஸும் பரவ ஆரம்பித்துள்ளது. உலக மக்கள் பெரிதும் அச்சத்திலுள்ளதுடன், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல வழிகளிலும், உலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்க விஞ்ஞானிகள் கொரோனா வைரஸை அழிப்பதற்கு சூப்பர் சூயிங்கத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த சூயிங்கத்தை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் இறங்கி உள்ளனர். இது குறித்து, அமெரிக்க ஆய்வு தலைமை அதிகாரி பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் ஹென்றி டேனியல் கூறும்போது, கொரோனா வைரஸ் ஒருவர் தும்மலின் போதும், இருமலின் போதும், பேசும்போதும் வைரஸ் அவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகின்றது. இதனால், உமிழ்நீரிலுள்ள கொரோனா வைரஸை சூயிங்கம் கொன்று விடும். இதனால், கொரோனா வைரஸ் உருவாகும் இடத்திலேயே அழிக்கப்படும்.

இதனால், கொரோனா வைரஸ் பரவலும் தடுக்கப்படும். இந்த சூயிங்கத்திலிருந்து, தாவரத்திலிருந்து பெறப்படும் 'ஏசிஇ2' என்ற புரதம் பயன்படுத்தப்படுகின்றது.

கொரோனா நோயாளிகளின் உமிழ்நீர் மாதிரியில் இதனைப் பரிசோதித்தபோது, நல்ல பலனைக்கொடுத்துள்ளது. இந்த ஆய்வுகள் நல்ல பலனைக் கொடுத்தமையினால், இந்த சூயிங்கத்தை வைத்தே, கொரோனா வைரஸை நாம் அழித்து விட முடியுமெனவும், அவர் கூறியுள்ளார்.

## ஊழியர்கள் பற்றாக்குறையினால் நெருக்கடியில் கனேடிய நிறுவனங்கள்

கனடாவில் ஊழியர்களுக்கு தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தொழிற் சந்தையில் ஊழியர்களுக்கு பற்றாக்குறையான நிலைமை உருவாகியுள்ள காரணத்தினால் கொரோனா தடுப்பூசி குறித்த சட்டங்களிலும் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் ஒமிக்ரோன் திரிபு பரவி வரும் நிலையிலும், ஊழியர்களுக்கான தட்டுப்பாட்டினால் கட்டாய கொரோனா தடுப்பூசி விதிகளை நிறுவனங்கள் தளர்த்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களுக்கு பணியில் நீடிக்க, அனுமதி வழங்குவதில்லையென, கனேடிய அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத பெரும் எண்ணிக்கையிலான பொதுத்துறை பணியாளர்களுக்கு சம்பளமற்ற அடிப்படையில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## இறந்து போன 100 பூனைகளுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்த நபர்



பிரான்சில், பெண்ணொருவர் தனது உறவினரை மருத்துவமனையில் சேர்த்தபோது, அவரது குடியிருப்பில் எண்ணற்ற பூனைகள் இறந்து கிடந்ததைக் கண்டுபிடித்தார்.

பிரான்சில் நைஸ் பகுதியில் 81 வயதான பெண்ணொருவர் வசித்து வந்துள்ளார்.இவரது குடியிருப்பிலிருந்தே, 100 இறந்த பூனைகளும், உயிருடன் 20 பூனைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் மிருக நல அமைப்பொன்று தகவல் வெளியிட்டுள்ளது. பூனைகளின் கழிவுகளை, சிறிய பிளாஸ்டிக் அல்லது மரத்தாலான பெட்டிகளில், அந்த முதியவர் பாதுகாத்து வந்துள்ளதும், கண்டுபிடிக்கப்பட்டது.

செல்லப் பிராணிகளை வளர்க்கும் ஆர்வம் அதிகமாக கொண்ட அந்த நபருக்கு, திடீரென்று உடல்நலக் கோளாறு ஏற்படவே, அவரது உறவினரான பெண் ஒருவரே பூனைகளின் சடலங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதை கண்டறிந்தார். இதனையடுத்து மிருக நல அமைப்பு ஒன்றிற்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், அவர்கள் வந்து உயிருடன் 20 பூனைகளை, மீட்டுள்ளனர். சுமார் 100 பூனைகள், சடலமாக பெட்டிக்குள் அடைக்கப்பட்ட நிலையில், கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## பாம்பிற்குப் பயந்து 14 கோடி ரூபா பெறுமதியான வீட்டினை தீ வைத்துக் கொளுத்திய மகா புத்திசாலி



அமெரிக்காவில் பாம்புத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காக, 14கோடி ரூபா மதிப்புள்ள வீட்டினை, உரிமையாளர் ஒருவர் தீ வைத்துக் கொளுத்தும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அந்த வீடு வாஷிங்டன் டிசி அருகே Poolesville பகுதியில் அமைந்துள்ளது. அவரது வீட்டில் அடிக்கடி பாம்புகள் அழையா விருந்தாளிகளாக வந்து செல்வது வழக்கம்.

இந்நிலையில், பாம்பு நடமாட்டத்தைத் தடுக்கும் வகையில், 14 கோடி ரூபா மதிப்பிலான தனது சொந்த வீட்டையே தீ வைத்துக் கொளுத்தியுள்ளார்.

## அமெரிக்கா- இந்தியாவிற்கு பேரதிர்ச்சி கொடுத்து முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டது சீனா



உலக வல்லரசு நாடுகளின் பட்டியலில், சீனா முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

கொரோனா தொற்றுக் காலத்தில் அனைத்து நாடுகளின் வர்த்தகமும் பாதிக்கப்பட்ட நிலையில், சீனா கொரோனா தொற்றுப் பாதிப்பிலிருந்து வேகமாக மீண்டு வந்து, உற்பத்தியை அதிகரித்துப் பெரிய அளவிலான வர்த்தகம் மற்றும் ஏற்றுமதியைப் பதிவு செய்து, மிகப்பெரிய உச்சத்தை அடைந்துள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய வல்லரசு நாடுகளின் பட்டியலில் நீண்ட காலமாக முதல் இடத்தில் இருந்த அமெரிக்காவை பின்னுக்குத்தள்ளி, சீனா முதலிடத்திற்கு முன்னேறியது.

அத்தோடு, லோவி இன்ஸ்டிடியூட் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆசியாவின் பலம் பொருந்திய நாடுகளின் பட்டியலில், வழக்கம்போல் சீனா, முதல் இடத்திலேயே உள்ளது.

சீனாவுடன் போட்டிபோடும் இந்தியா, 4ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், ஆச்சரியம் தரும் விதமாக, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகள் சில படிகள் முன்னேறியுள்ளன.

2021இல், இந்தியாவில் மதிப்பீடு பெரிய அளவில் சரிந்துள்ளது. இது இந்தியாவுக்கும், இந்தியர்களுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆனால், எதிர்கால வளர்ச்சி அளவீடுகளைப் பொறுத்த வரையில், அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்தபடியாக, இந்தியா தான் உலகளவில் மூன்றாவது இடத்திலுள்ளது.

லோவி இன்ஸ்டிடியூட் நிறுவனத்தின், 2030ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி அளவீடுகள் குறித்த கணிப்பிலேயே, இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.இந்தியா பாதுகாப்புக் கூட்டணியில் 7ஆவது இடத்தில் இருந்தாலும், பொருளாதார வளர்ச்சிக் கூட்டணியில் 8ஆவது இடத்திலேயே உள்ளது. இவ்விரண்டு காரணிகளினாலும், இந்தியா இருவேறு திசைகளில் பயணிக்கத் தொடங்கியுள்ளதாக, லோவி நிறுவனம் தெரிவித்துள்ளது. 2020 முதல் 2021 வரையில் இந்தியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக அடுத்தடுத்து முடக்கம், வர்த்தகப் பாதிப்பு, உற்பத்திப் பாதிப்பு எனப் பல பிரச்சினைகள் இருக்கும் வேளையில், சீனாவுடனான, எல்லைப் பிரச்சினை, அதன் மூலம் ஏற்பட்ட பதற்றம் ஆகியவை, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.இதன் காரணமாக, இந்தியா 4ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் இராஜதந்திரப் புறக்கணிப்பிற்கு பதிலடி கொடுத்தது சீனா

2022ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள குளிர் கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு அமெரிக்காவின் இராஜதந்திரப் புறக்கணிப்பிற்கு, சீனா கண்டனம் தெரிவித்துள்ளதுடன், பதிலடி கொடுப்பதாக அச்சுறுத்தியுள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் இதுகுறித்து தெரிவிக்கும் போது 'இந்தப் புறக்கணிப்புக்கு சீனா உறுதியான எதிர் நடவடிக்கைகளை எடுக்கும். விளையாட்டில், அரசியல் நடுநிலைமையை அமெரிக்கா மீறுகின்றது. முன்மொழியப்பட்ட புறக்கணிப்பு பொய்கள் மற்றும் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டதெனவும் கூறியுள்ளார். வர்த்தகப் போர், கொரோனாவின் தோற்றமென பல்வேறு விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவிவருகின்ற நிலையில், ஸின்ஜியாங்கின் மேற்குப் பகுதியில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் உய்குர் சிறுபான்மையினரை ஒடுக்கியதில், சீனா இனப்படுகொலை செய்ததாக, அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை சீனா கடுமையாக மறுத்துள்ளது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.